# தமிழன்
THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 484 பிலவ வருடம், பங்குனி மாதம் 08ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(22.03.2022) ஹிஜ்ரி - 1443, ஷஃபான் - 18, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.30


## மண்ணெண்ணெய் வரிசையில் நின்ற மற்றுமொருவர் மரணம்

### 3 நாட்களில் மூன்றாவது உயிரிழப்பு

மண்ணெண்ணெய் வரிசையில் நின்று நேற்றும் ஒருவர் மயங்கி விழுந்து மரணமடைந்துள்ளார்.

மீரிகமவில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் நின்றிருந்தவர்களில் ஒருவர் இவ்வாறு மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

மாரடைப்பு காரணமாக இவர் உயிரிழந்திருக்கலாமென ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலும், சனிக்கிழமை, வத்தேகம - உட.தலவின்னவில் 71 வயதான ஒருவர்...

02 பக்கம்

## 133 பேருடன் சென்ற சீன விமானம் விபத்து



11 பக்கம்

# சர்வகட்சி மாநாட்டை கட்சிகள் புறக்கணிப்பு!

### ஐக்கிய மக்கள் சக்தி, த.மு.கூ., இ.தொ.கா., ஜே.வி.பி., தேசிய சுதந்திர முன்னணி, பிவித்துரு ஹெல உறுமய ஜனாதிபதியின் அழைப்பை நிராகரிப்பு

(யோ.தர்மராஜ்)

பொருளாதார நெருக்கடிகளிலிருந்து நாட்டை மீட்பதற்காக சகல கட்சிகளிடமிருந்தும் கிடைக்கும் யோசனைகள் குறித்தும் தற்போதைய நிலைமைகள் குறித்தும் ஆராய்வதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இடம்பெறவுள்ள சர்வகட்சி மாநாட்டை அரசின் பங்காளிகள் மற்றும் பிரதான எதிர்க்கட்சிகளும் புறக்கணித்துள்ளன.

ஜனாதிபதி தலைமையில் நாளை நடைபெறவுள்ள சர்வகட்சி மாநாட்டிற்கு அனைத்து கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில் பல கட்சிகள்...

02 பக்கம்

## சீனாவிடமும் கடன் கோரியது இலங்கை; பரிசீலிப்பதாகக் கூறுகிறார் தூதுவர்



ஒரு பில்லியன் அமெரிக்க டொலரை கடனாகவும் மற்றும் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் வசதிகளை இலங்கை, சீனாவிடம் கோரியுள்ளதாக இலங்கைக்கான சீனத் தூதுவர் சி.சென்ஹோங் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

70 ஆண்டுகளுக்கு முன்பு சீனா மிகக் குறைந்த புள்ளியில் இருந்தபோது இலங்கை சீனாவுக்கு உதவியதால், இலங்கையின் நெருக்கடி சூழ்நிலையை சீனா பயன்படுத்திக்கொள்ளாது. இலங்கையில் சர்வதேச மற்றும் தேசிய ரீதியாக எந்த மாற்றங்கள் ஏற்பட்டாலும் இலங்கையை சிறந்த நட்புடனே சீனா பார்க்கும். கொரோனா தொற்று தொடக்கம் தற்போதுவரை இலங்கை முகம்கொடுக்கும் நெருக்கடிகளுக்கு...

02 பக்கம்



## அமெரிக்கத் தூதுவர் ரணிலுடன் பேச்சு

முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்ரமசிங்கவிற்கும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சுங்கிற்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலுள்ள ரணில் விக்ரமசிங்கவின் இல்லத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி குறித்தும் இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

இலங்கையின் உடனடி பொருளாதார சவால்களுக்கு அமெரிக்காவும் இலங்கையும் இணைந்து எவ்வாறு...

02 பக்கம்

## வரிசையில் நிற்கும் மக்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்

### இராஜாங்க அமைச்சர் ரொஷான் பகிரங்கமாக தெரிவிப்பு

(யோ.தர்மராஜ்)



ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நிதி அமைச்சரை சந்திக்கும் அனைத்தும் சிறப்பானது எனவும் 'ஓகே சேர், இயஸ் சேர்' என என்னாலும் கூற முடியும். இயஸ் சேர், இயஸ் சேர் எனக் கூறி எவ்வளவு நாட்கள் காலத்தை கடத்த முடியும் என இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

மக்கள் இன்று எரிபொருள் உள்ளிட்ட பொருட்களுக்காக வரிசையில் காத்திருந்து பாதிக்கப்படுவதற்கு அரசியல்வாதி என்ற வகையில் எங்களுக்கு பொறுப்பிருப்பதால்...

02 பக்கம்

## எரிபொருள் தட்டுப்பாட்டால் குப்பை சேகரிப்பு நிறுத்தம்

### கொழும்பு நகரம் நரகமாகும் நிலைமை

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கொழும்பு நகரில் சில இடங்களில் குப்பைகள் சேகரிக்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது.

கங்காராம, நாரஹேன்பிட்டி, பொரளை, தெமட்டகொடை ஆகிய பிரதேசங்களில் குப்பைகளை சேரிக்கும் வாகனங்களில் எரிபொருள் தீர்ந்து போயுள்ளதால், அந்த பிரதேசங்களில் உள்ள குப்பைகளை அப்புறப்படுத்தும் நடவடிக்கை தடைப்பட்டுள்ளது என கொழும்பு மாநகர சபையின் திண்மக் கழிவு பொருட்கள் தொடர்பான...

02 பக்கம்

## இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் வாகனம் மீது சிலிண்டர் தாக்குதல்

### கேகாலை ரன்வலையில் சம்பவம்



சமையல் எரிவாயுவுக்காக வரிசையில் காத்திருந்த மக்கள், தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சரும் கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கனக ஹேரத்திற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

கேகாலை – ரன்வல புதிய வீதி சந்திக்கு அருகில் நேற்றுக் காலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கேகாலை மாவட்டத்துக்கான...

02 பக்கம்

## வீதிக்கு இறங்கிய மக்கள்!



02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..



நல்ல யோசிச்சுப் பார்த்தா நாளைக்கு நடக்கப்போறது சர்வகட்சி கூட்டமில்லை... அரசுக்கும், கூட்டமைப்புக்குமிடையிலான பேச்சு தான் பாருங்கோ...

## கோட்டாபய தலைமையில் ஆளுங்கட்சியின் கூட்டம்

### எம்.பிக்கள் கட்டாயம் கலந்துகொள்ள பணிப்பு

(யோ.தர்மராஜ்)

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு மத்தியில் ஆளுங்கட்சியின் விசேட கூட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இன்று நடைபெறவுள்ளது.

அதன்படி, இந்த சந்திப்பு இன்று மாலை 6 மணிக்கு அலரி மாளிகையில் நடைபெறவுள்ளதாக அறிய முடிந்தது...

02 பக்கம்

## எரிபொருள் நிலையத்தில் கத்திக்குத்து ஒருவர் பலி

(யோ.தர்மராஜ்)

நிட்டம்புவ – ஹொரகொல்ல பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் முச்சக்கர வண்டி சாரதி மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டுநருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் கத்திக் குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தையடுத்து தப்பிச் சென்றிருந்த முச்சக்கரவண்டி சாரதி நிட்டம்புவ பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் 29 வயதுடைய ஒருவரே கத்திக்குத்துக்கு இழக்காகி உயிரிழந்துள்ளார்.

நிட்டம்புவ, ஹொரகொல்ல பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றுமுன்தினம் மோட்டார்...

02 பக்கம்

## ஜனாதிபதி பதவி இராஜினாமா தகவல் உண்மைக்குப் புறம்பானது

### ஊடகப் பேச்சாளர் தகவல்

பதவியை இராஜினாமா செய்வது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆலோசித்து வருவதாக வெளியாகும் செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை என ஜனாதிபதி ஊடகப் பேச்சாளர் கிங்ஸ்லி ரத்நாயக்க அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில்,

கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்வது தொடர்பில் ஆலோசித்து வருவதாக சமூக ஊடகங்களில் தகவல்கள் பரவலாக பரப்பப்பட்டு வருகின்றன.

எனினும் இந்த செய்திகள் உண்மைக்கு புறம்பானவை. இது போன்றதொரு நெருக்கடியான...

02 பக்கம்

## இலங்கைக்கு நெருக்குதல் கொடுக்கும் சீன வங்கிகள்

வெளிநாட்டு நாணய பற்றாக்குறையினால் படுமோசமான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் இலங்கை, கடந்தவாரம் இந்தியாவிடம் அவசர கடனுதவியாக 100 கோடி டொலர்களை பெற்றதையடுத்து இப்போது சீனாவிடம் 250 கோடி டொலர்களை...

02 பக்கம்

## ரிப்பர் விபத்தில் சிக்கிப் பலியான ரஷ்யப் பெண்

மணல் ஏற்றிச் செல்லும் ரிப்பர் வண்டியில் மோதுண்டு ரஷ்யப் பெண்ணொருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவம் அஹங்கம நகரில் நடந்துள்ளது.

38 வயதான ரஷ்ய சுற்றுலாப் பயணியே இவ்வாறு உயிரிழந்துள்ளதுடன், கடவுச்சீட்டின் மூலம் பெண்ணை அடையாளம் கண்டுள்ளதாக அஹங்கம பொலிஸார் கூறியுள்ளனர்.

மாத்தறையில் இருந்து காலி நோக்கி மோட்டார் சைக்கிளில் ரஷ்யப் பெண் சென்றுகொண்டிருந்தபோது, அவருக்கு முன்னால் சென்ற ரிப்பர் வண்டியின் இடது பக்கமாக முந்திச்செல்ல முயற்சித்துள்ளார்.

அப்போது மோட்டார் சைக்கிள் வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த முச்சக்கரவண்டியில் மோதி, ரஷ்யப் பெண் வீதியில்...

02 பக்கம்

## தேவாலய கைக்குண்டு மீட்பு வழக்கில் மருத்துவருக்கு பிணை

பொரளையில் உள்ள தேவாலயத்தில் கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பில் கைதுசெய்யப்பட்ட ஓய்வுபெற்ற மருத்துவர் நேற்று பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

கொழும்பு மேல் நீதிமன்றம் அவருக்கு பிணை வழங்கியது.

கடந்த ஜனவரி 11ஆம் திகதியன்று தேவாலயத்தில் இருந்து கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து ஓய்வுப்பெற்ற...

02 பக்கம்




இந்தியாவிடம் கடன்களை பெற்ற கையோடு இலங்கை அரசாங்கம் சீனாவிடம் கடன் கோரியமை இந்திய அரசுக்கு அதிருப்தியை கொடுத்துள்ளதாக தகவல்.

அதனால் இலங்கை அரசுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுக்கும் வேலைகளை செய்ய ஆரம்பித்துள்ளதாம் புதுடில்லி. ஆளுங்கட்சியின் முக்கிய கட்சி சர்வகட்சி மாநாட்டை புறக்கணித்தமையும் இதன் காரணமாகத்தான் என்கின்றன உள்ளகத் தகவல்கள்.

இவ்வாரம் இன்னொரு அமைச்சரின் அதிரடி அறிவிப்பும் வெளியாகவுள்ளதாக சொல்லப்படுகிறது.

## ஒத்திவைக்கப்பட்ட பரீட்சையை மேல்மாகாணத்தில் நடத்த முடிவு

(யோ.தர்மராஜ்)

டொலர் பிரச்சினையால் ஏற்பட்ட கடதாசி தட்டுப்பாட்டினால் மேல்மாகாணத்தில் ஒத்திவைக்கப்பட்ட 9,10 மற்றும் 11ஆம் வகுப்புகளின் தவணைப் பரீட்சையை உரிய திகதியிலேயே நடத்துவதற்கு மாகாண கல்வித் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

பரீட்சைக்கு தேவையான வினாத்தாள்களை தயாரிப்பதற்கு தேவையான கடதாசிகளை பெற்றுக்கொள்வதற்கு முடிந்துள்ளதாக மேல் மாகாண கல்வித் திணைக்கள பணிப்பாளர் ஸ்ரீ லால் நோனிஸ் தெரிவித்துள்ளார்.

நாட்டில் டொலர் நெருக்கடியால் தேவையான...

02 பக்கம்

# தேசிய பொருளாதார சபைக்கு ஐந்து உடனடி பரிந்துரைகள்



தேசிய பொருளாதார சபைக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட ஆலோசனைக் குழு, விரைவாகச் செயற்படுத்த வேண்டிய ஐந்து பரிந்துரைகளை முன்வைத்துள்ளது.

ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்கள் முதற் தடவையாக நேற்று முற்பகல், ஜனாதிபதியையும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும், தேசிய பொருளாதார சபையின் உறுப்பினர்களையும் சந்தித்து தமது பரிந்துரைகளை முன்வைத்தனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்களான பெசில் ராஜபக்ஷ, பந்துல குணவர்தன, மஹிந்தானந்த அளுத்கமகே, மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், ஜனாதிபதி செயலாளர் காமினி செனரத் மற்றும் ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## சம்மாந்துறையில் காட்டு யானை தாக்கி ஒருவர் பலி!



(சம்மாந்துறை நிருபர்)

சம்மாந்துறை வயல் பகுதியில் காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளாறு மயில்லோடை வயல் பிரதேசத்தில் வயல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது நேற்று (21) மதியம் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் சம்மாந்துறை விளினையடியைச் சேர்ந்த 68வயதுடைய இரண்டு பெண் பிள்ளைகளின் தந்தையாவார். குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஜனாதிபதியின் அழைப்பை நிராகரிக்க வேண்டும்

### காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத் தலைவி கோரிக்கை

(யாழ். நிருபர்)



ஜனாதிபதியுடனான சந்திப்பினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் புறக்கணிக்க வேண்டும் என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத் தலைவி யோகராசா கனகரஞ்சினி தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் அரசியல்வாதிகள் ஓர் அணியில் திரண்டு எமக்காக பேச வேண்டும். எமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும்.

ஜனாதிபதியை சந்திக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக நாங்கள் அறிகிறோம். அதனை அவர்கள் புறக்கணிக்க வேண்டும் என கோருகிறோம்.

அரசாங்கம் ஆட்டம் கண்டுள்ள இந்த நிலையில் அவர்களுடன் பேச்சுக்களை நடத்துவதனை விட இந்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி எமக்கான உரிமைகளையும், எமக்கான நீதியையும் பெற அவர்கள் அணிதிரள வேண்டும்.

குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர், நாடாளுமன்ற உறுப்பினர், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் ஜனாதிபதியுடனான பேச்சுகளை புறக்கணிக்க வேண்டும்.

ஜனாதிபதியுடன் பேச்சுக்கு செல்வார்களாயின் அது எமக்கு இழைக்கப்படும் அநீதி மாத்திரமல்ல, துரோகமும் கூட என மேலும் தெரிவித்தார்.

## அமெரிக்கத் தூதுவர்...

நிரந்தரத் தீர்வைக் காண்பது என்பது குறித்து முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடியதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் ட்விட்டரில் தெரிவித்துள்ளார்.

ஒரு நாட்டில் ஜனநாயகத்தைப் பாதுகாக்க வலுவான எதிர்க்கட்சியின் அவசியம் குறித்தும் இங்கு பேசப்பட்டது.

## ஜனாதிபதி...

சூழ்நிலையில் தப்பிச் செல்லும் நபர் ஜனாதிபதி அல்ல.

தற்போதைய நிலைமைக்கு தீர்வு காண அனைத்து நடவடிக்கைகளையும் ஜனாதிபதி எடுத்து வருகிறார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தேவாலய...

மருத்துவர் சில நாட்களின் பின்னர் கைதுசெய்யப்பட்டார்.

ஏற்கனவே இந்த கைக்குண்டு தொடர்பில் மூவர் கைதுசெய்யப்பட்டு அவர்களும் பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

## ரிப்பர் விபத்தில்...

விழுந்துள்ளதுடன் ரிப்பர் வண்டி பெண் மீது மோதியுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த ரஷ்யப் பெண் உயிரிழந்துள்ளதாக அஹங்கம பொலிஸார் கூறியுள்ளனர். இலங்கைக்கு சுற்றுலாப் பயணியாக வந்திருந்த ரஷ்யப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

## ஒத்திவைக்கப்பட்ட...

கடதாசிகளை இறக்குமதி செய்தாலும் அதனை விடுவிப்பதற்கு போதுமான டொலர் இன்மையால் பாடப்புத்தகங்கள் மற்றும் பரீட்சைக்கான வினாத்தாள்களை அச்சிடுவதில் பெரும் பாதிப்பு ஏற்பட்டதால் தவணைப் பரீட்சையை ஒத்திவைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

எனினும், தற்போது மேல்மாகாணத்திலுள்ள 9, 10 மற்றும் 11 ஆம் வகுப்பு தவணை பரீட்சைக்கு தேவையான வினாத்தாள்களை தயாரிப்பதற்கு தேவையான கடதாசிகளை பெற்றுக்கொள்ள முடிந்துள்ளதால் குறித்த பரீட்சைகளை தீர்மானிக்கப்பட்ட அதே திகதியில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 9, 10 மற்றும் 11ஆம் வகுப்புகளுக்கான தவணைப் பரீட்சை மார்ச் 29ஆம் திகதி நடைபெறும் என மாகாண கல்வி திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளுக்கான தவணைப் பரீட்சை நேற்று (21) முதல் நடைபெறுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கோட்டாபய...

இதன்படி, ஆளுங்கட்சியைச் சேர்ந்த அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதில் கட்டாயம் கலந்துகொள்ள வேண்டும் எனவும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் நெருக்கடி உள்ளிட்ட பொருளாதார விடயங்கள் தொடர்பில் இந்த கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இந்த விசேட கூட்டத்திற்கு முன்னதாக, ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற குழுக் கூட்டம் இன்று (22) காலை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நாடாளுமன்ற வளாகத்தில் இந்த சந்திப்பு நடைபெறவுள்ளது.

இதேவேளை, நாளை (23) ஜனாதிபதி தலையில் சர்வகட்சி மாநாடும் இடம்பெறவுள்ள நிலையில், இன்று இந்த சந்திப்பு இடம்பெறுவது அரசியல் வட்டாரத்தில் பெரும் பேசு பொருளாகியுள்ளது.

## வீதிக்கு...

மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டால் ஆத்திரமடைந்த மக்கள் பேஸ்லைன் வீதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அரசாங்கம் தற்போதைய பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முடியாததால் ஆத்திரமடைந்த மக்கள் தமக்கு மண்ணெண்ணெய் வழங்குமாறு கோரி நேற்றுக் காலை வீதியில் இறங்கிப் போராடியுள்ளனர்.

மண்ணெண்ணெய் கோரி ஒருகொடவத்தை பிரதேச மக்கள் கொழும்பு பேஸ்லைன் வீதியை ஒருகொடவத்தை சந்தியிலிருந்து மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் ஒரு மணி நேர ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து, வீதியை விட்டு விலகி, போக்குவரத்துக்கு அனுமதி வழங்கப்பட்டது.

## மண்ணெண்ணெய்...

மயங்கிவிழுந்து உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் கடவத்தையில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் வரிசையில் நின்றுக்கொண்டிருந்தவர்களில் 70 வயதான ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## சீனாவிடமும் கடன்...

தீர்வாக சீனா இலங்கைக்கு 2.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.

கடன்களை மீள செலுத்துவது தொடர்பாக இலங்கை தற்போதுவரை நல்ல அறிக்கையையே வைத்துள்ளது. கடன் மீள செலுத்தும் அறிக்கைக்கு அமைய கடந்த வாரத்தில் சீனாவிற்கு செலுத்த வேண்டியிருந்த கடனை இலங்கை முறையாக செலுத்தியுள்ளது.

இந்த நிலையில், ஒரு பில்லியன் அமெரிக்க டொலரை கடனாகவும் மற்றும் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் வசதிகளை இலங்கை கோரியுள்ளது. இந்த கோரிக்கைகளை சீன அதிகாரிகள் தற்போது கவனத்தில் கொண்டு அதனை வழங்குவது குறித்து பரிசீலித்து வருகின்றனர் - என்றார்.

## எரிபொருள் தட்டுப்பாட்டால்...

நிலையியல் குழுவின் உறுப்பினர் மகேந்திர டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஏனைய இடங்களில் திண்மக் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்தும் ஒப்பந்தம் தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும் மேற்கூறிய பிரதேசங்களில் உள்ள திண்மக் கழிவுப் பொருட்களை கொழும்பு மாநகர சபையே சேகரித்து வருகிறது.

தனியார் ஒப்பந்த நிறுவனம் தமது வாகனங்களுக்கு தேவையான எரிபொருள் தொகையை பெற்றுக்கொண்டுள்ளன. எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கொழும்பு நகரில் குப்பைகள் சேகரிப்பதில் தடையேற்பட்டுள்ளது.

இரண்டாவது முறையாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதுடன் மார்ச் மாத ஆரம்பத்திலும் இப்படியான நிலைமை ஏற்பட்டது எனவும் அவர் கூறியுள்ளார்.

## சர்வகட்சி...

அதனை புறக்கணிப்பதாக அறிவித்துள்ளன.

அதன்படி, அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 10 பங்காளி கட்சிகளான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், விமல் மற்றும் உதய கம்மன்பில தரப்பிலுள்ள 10 பங்காளிகளில் 8 கட்சிகளும் புறக்கணித்துள்ளன. அத்தோடு, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி புறக்கணித்துள்ளதாக அக்கட்சி ஜனாதிபதி செயலாளருக்கு கடிதம் மூலம் நேற்று அறிவித்துள்ளது.

அதேபோன்று, சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்வது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி இன்று (22) காலை தீர்மானிக்கவுள்ளது. அநேகமாக ரணில் இதில் கலந்துகொள்வாரென தெரிகிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற கட்சிகள் சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தி அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஜனாதிபதியினால் உரிய நேரத்தில் உரிய தீர்மானங்கள் எடுக்கப்படாதது, முறையற்ற நிதிக் கொள்கைகள், பொருத்தமற்ற நிர்வாக கட்டமைப்பு போன்ற செயற்பாடுகளே இன்றைய நிலைமைக்கு காரணமாகியுள்ளன.

அரசாங்கத்திலுள்ளவர்களே அரசாங்கத்தின் செயற்பாடுகளை வெளிப்படையாக விமர்சித்து வருகின்றனர். எனவே, தற்போதைய நெருக்கடிகளுக்கு சர்வகட்சி மாநாட்டினால் தீர்வு காண முடியாது என நினைக்கின்றோம்.

மக்களுக்காக அரசாங்கம் எடுக்கும் முடிவுகளுக்கு எதிர்க்கட்சி எவ்வித நிபந்தனையுமின்றி ஆதரவு வழங்கும். ஆனால், தனிப்பட்ட இலாபத்துக்காக முன்னெடுக்கும் எந்தவொரு செயற்பாட்டுக்கும் எதிர்க்கட்சி ஆதரவளிக்காது. எனவே, ஜனாதிபதி தலைமையில் இடம்பெறும் சர்வகட்சி மாநாட்டுக்கு ஐக்கிய மக்கள் சக்தி கலந்துகொள்ளாது என குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 10 பங்காளிக் கட்சிகளும் சர்வகட்சி மாநாட்டைப் புறக்கணிப்பதற்கு தீர்மானித்துள்ளது. எனினும், 10 கட்சிகள் சார்பாகவும் இருவரை குறித்த மாநாட்டிற்கு அனுப்புவதற்கு தீர்மானித்துள்ளது. அதன்படி நாடாளுமன்ற உறுப்பினர்களான அத்துரலிய ரத்ன தேரர் மற்றும் பேராசிரியர் திஸ்ஸ விதாரண ஆகியோர் சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளதாக முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அதேபோன்று, ஜனாதிபதியினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ளப்போவதில்லை என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

இந்த சர்வகட்சி மாநாடானது, பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கானதல்ல. மாறாக, அரசாங்கத்திற்குள் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியினை தீர்ப்பதற்கானது என அதன் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் அமைச்சரவையில் இருந்த இரு அமைச்சர்கள் நீக்கப்பட்டதை தொடர்ந்து அரசாங்கத்துக்குள் ஏற்பட்டுள்ள அரசியல் முரண்பாடுகளை தீர்த்து வைப்பதற்காக ஜனாதிபதிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் விளைவாக சர்வகட்சி மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். எனவே, சர்வகட்சி மாநாட்டைக் கூட்டுவது எவ்வித பயனுமில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோன்று, நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியும் சர்வகட்சி மாநாட்டை புறக்கணிப்பதாக ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

பொருளாதாரத்துறையில் மட்டுமல்லாது, பொருளாதார வீழ்ச்சியின் தொடர்ச்சியாக நம் நாடு அரசியல், சமூக, கலாசாரதுறைகள் உள்ளிட்ட சகல துறைகளிலும் அதல பாதாளத்தில் விழுந்துள்ள பின்னணியில், சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு விடுக்கப்பட்ட அழைப்பை கவனமாக பரிசீலித்து, இம்மாநாட்டில் கலந்துகொள்வதில்லை என தமிழ் முற்போக்கு கூட்டணி முடிவு செய்துள்ளதாக கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் தோல்வியை எதிரணியின் தலைகளில் சுமத்துவதற்கான முயற்சியாகவும், அரசாங்கத்தின் பங்காளி கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை திருப்திபடுத்த அரசாங்கம் செய்யும் முயற்சியாகவும் பார்க்கின்றோம் - என்றார்.

எவ்வாறாயினும், இந்த கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துகளை வெளியிட தமது கட்சி தீர்மானித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அனைத்து கட்சிகளையும் சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்ரிபால சிறிசேன அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இராஜாங்க அமைச்சர்...

லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் பிரதான விநியோக முகவரான, இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் நேற்று காலை கேகாலை ரன்வல சந்தியின் ஊடாக பயணித்தபோதே, எரிவாயுவுக்காக வரிசையில் காத்திருந்த மக்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

இதனையடுத்து, இராஜாங்க அமைச்சர் தொடர்ந்தும் வாகனத்தை செலுத்த முற்பட்டதாகவும், அதன்போது வரிசையில் காத்திருந்த நபர் ஒருவர் கையில் இருந்த எரிவாயு சிலிண்டரினால் இராஜாங்க அமைச்சரின் வாகனத்தின் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

ஏறக்குறைய இரண்டு தசாப்தங்களாக கேகாலை மாவட்டத்தில் பிரதான எரிவாயு விற்பனை முகவராக இருந்துவரும் கனக ஹேரத், கேகாலை மாவட்டம் முழுவதும் பல எரிவாயு விநியோக முகவர் நிலையங்களையும் கொண்டுள்ளார்.

மேற்படி சம்பவத்தின் பின்னர் வீதியை மறித்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டதாக கூறப்படுகிறது.

இதேவேளை, சிறிது நேரத்தில் அவ்வீதியின் ஊடாக பயணித்த கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதயகாந்த குணதிலக, மேற்படி சம்பவம் தொடர்பில் அறிந்ததையடுத்து மாற்று வழியில் பயணித்ததாக தெரியவந்துள்ளது.

## இலங்கைக்கு நெருக்குதல்...

கடனுதவியாக கேட்டிருக்கிறது.

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோள் தனது நாட்டு அரசாங்கத்தினால் பரிசீலிக்கப்படுகின்றது என்று கொழும்பில் உள்ள சீனத்தூதுவர் அறிவித்திருக்கிறார்.

ஆனால், அதேவேளை சீனாவின் இரு முக்கியமான வங்கிகளிடம் இருந்து பெற்ற கடன்களை திருப்பிச்செலுத்தவேண்டிய நிர்ப்பந்தம் இலங்கைக்கு ஏற்பட்டிருக்கிறது.

சீன அபிவிருத்தி வங்கியும் சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கியும் (எக்ஸிம் பாங்க்) இந்த மாதத்துக்கான தவணைக்கடனை தாமதமின்றி மீளச்செலுத்துமாறு இலங்கையின் திறைசேரிக்கு நெருக்குதல் கொடுக்கத்தொடங்கியிருப்பதாக நம்பகமான உத்தியோகபூர்வ வட்டாரங்கள் கூறுகின்றன.

கடனை மீளச்செலுத்தும் ஏற்பாடுகளை மறுசீரமைக்குமாறு இலங்கை அரசாங்கத்தினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை இந்த சீன வங்கிகள் அலட்சியம் செய்திருக்கின்றன என்று நிதியமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் கூறினார்.

இலங்கை சீனாவுக்கு இந்த வருடம் 150 கோடி டொலர்கள் தொடக்கம் 200 கோடி டொலர்கள் வரை கடனை மீளச்செலுத்த வேண்டும். கடந்த சில வருடங்களாக சீனாவிடம் இலங்கை பெற்ற கடன் தொகை 450 கோடி டொலர்களுக்கும் அதிகமாகும் என்று நிதியமைச்சின் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

சீன அபிவிருத்தி வங்கிக்கு 5 கோடி 35 இலட்சத்து 96 ஆயிரம் டொலர்களையும் சீன எக்ஸிம் வங்கிக்கு ஒரு கோடி 70 இலட்சம் டொலர்களையும் கடன் தவணையாக இம்மாதம் இலங்கை செலுத்தவேண்டும். அத்துடன் இலங்கை நீர் சபை சீன எக்ஸிம் வங்கிக்கு 38 கோடி 61 இலட்சத்து 90ஆயிரம் யுவான்களை செலுத்தவேண்டும். இதற்கான காலக்கெடு கடந்த வெள்ளிக்கிழமை காலாவதியாகிவிட்டது.

இந்த தவணைக்கடன்களை மீளச்செலுத்துவது தற்போதைய சூழ்நிலையில் சிரமமானது என்று சீன அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டுவந்த அதேவேளை கடன் மீள்செலுத்துகை ஏற்பாட்டை மறுசீரமைக்குமாறு வேண்டுகோளும் விடுத்தது. ஆனால் சீன வங்கி (பாங்க் ஒவ் சைனா)தவணைக்கடனை உடனடியாக செலுத்திவிடுமாறு திறைசேரியிடம் வற்புறுத்தியிருக்கிறது. தவறினால் உடன்படிக்கையின் பிரகாரம் முழுக்கடனையும் மூன்று நாட்களுக்குள் திருப்பிச்செலுத்த வேண்டும் என்றும் வங்கி வலியுறுத்துகிறது.

## எரிபொருள்...

சைக்கிள்கள் எரிபொருள் நிரப்புவதற்காக வரிசையில் காத்திருந்தபோது, முச்சக்கரவண்டி சாரதி ஒருவர் வரிசையை மீறி முன்னோக்கி சென்றுள்ளார்.

இதன்போது, மோட்டார் சைக்கிள்கள் வரிசையிலிருந்த ஓட்டுநர் ஒருவருக்கும் குறித்த முச்சக்கரவண்டி சாரதிக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து, குறித்த முச்சக்கரவண்டி சாரதி எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்து வெளியேறியுள்ளார்.

எனினும், மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் எரிபொருளை பெற்றுக்கொண்டு வெளியில் வருகை தந்தபோது, குறித்த முச்சக்கரவண்டி சாரதி தன்னிடமிருந்த கூரிய ஆயுதத்தால் அவரை தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

தாக்குதலுக்குள்ளான 29 வயதுடைய மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் வத்துபிட்டிவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவத்தையடுத்து, தப்பிச் சென்றிருந்த முச்சக்கரவண்டி சாரதி நிட்டம்புவ நகரத்திற்கு அருகில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக நிட்டம்புவ பொலிஸார் தெரிவித்தனர். நிட்டம்புவ பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## வரிசையில் நிற்கும்...

உங்களிடம் நான் மன்னிப்பு கோருகின்றேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவையில் இடம்பெற்ற சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாட்டில் தற்போது பல்வேறு பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளன. எங்களுடைய கூட்டங்களுக்கு மக்கள் வந்திருந்தாலும் மனதிற்குள் எங்களை திட்டுவீர்கள். அதுவே உண்மை. உண்மையை மறைத்தும் பயனில்லை.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நிதி அமைச்சரை சந்திக்கும் அனைத்தும் சிறப்பானது எனவும் 'ஓகே சேர், இயஸ் சேர்' என என்னாலும் கூற முடியும். இயஸ் சேர், இயஸ் சேர் எனக் கூறி எவ்வளவு நாட்கள் காலத்தை கடத்துவது.

நுகர்வோர், விவசாயிகள், மீனவர்கள் மற்றும் அரச அதிகாரிகளும் இன்று அதிருப்தியிலேயே இருக்கின்றனர். இதற்கு தீர்வு தான் என்ன? தற்போது சிறுபோகம் ஆரம்பிக்கின்றது. எனினும், பலவந்தமாகவும் அச்சுறுத்தியும் இதனை செய்யுமாறு யாரையும் வற்புறுத்த முடியாது. மக்களின் கருத்துகளுக்கு நாங்கள் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

சேதனப் பசளை விவசாயத்திட்டம் நல்லது என்ற நிலைப்பாட்டிலேயே நானும் இருக்கின்றேன். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் இந்த திட்டம் கொண்டுவரப்பட்டமையினால் விவசாயிகள் 5 அடி பின்னால் சென்று 50 க்கு 50 வீதம் தாருங்கள் எனக் கோரினர். எனவே, நாங்கள் தற்போது 50 க்கு 50 சேதனப் பசளை விவசாயத்திற்கு செல்ல வேண்டும்.

அமைச்சரவை அமைச்சர்களிடம் இது குறித்து பேசும்போது, அரசாங்கம் சீர்குலைகின்றது. ஆகவே, நீங்கள் பேச வேண்டாம் என எங்களிடம் கூறுகின்றனர். மீண்டும், அவர்களே ஜனாதிபதியையும் பிரதமரையும் சந்தித்து அனைத்தும் நன்றாக இருக்கிறது, கிராமங்களில் அனைத்தும் நன்றாக இருக்கிறது எனவும் கூறுகின்றனர். இவ்வாறான ஏமாற்றங்களினாலேயே 2015 ஆம் ஆண்டும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வீட்டுக்குச் செல்ல வேண்டியிருந்தது.

பொய்யான பிரசாரங்களை முன்னெடுப்பது, இயஸ் சேர், ஒவ் சேர் எனக் கூறி ஏமாற்றும் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க முற்படுவோருக்கு ஆதரவு வழங்க நாங்கள் தயாரில்லை.

இந்தியாவிடம் கடன்பெற்று எரிபொருளை கொண்டுவந்தோம். மற்றொரு நாட்டிடமிருந்து கடன் பெற்று உணவுப் பொருட்களை கொண்டு வருவோம்.

இன்று மக்கள் எரிபொருள் வரிசையில் காத்திருந்து பாதிக்கப்படுவதற்கு அரசியல்வாதி என்ற வகையில் எங்களுக்கு பொறுப்பிருப்பதால் உங்களிடம் நான் மன்னிப்பு கோருகின்றேன். எரிவாயு வரிசையில் காத்திருக்கும் மக்கள், பாதிக்கப்பட்ட விவசாயிகளிடமும் நான் மன்னிப்பு கோருகின்றேன் - என்றார்.

# இன்றைய ராசி பலன்

22.03.2022 செவ்வாய்க்கிழமை பங்குனி 8

**ஜோதிடர் நற்பவி**

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

**நட்சத்திரம்: விசாகம்**
இரவு 8.14 வரை
**அனுஷம்**
இரவு 8.14 - 23.03.2022
மாலை 6.53 வரை

**யோகம்: ஹர்ஷணம்**
பிற்பகல் 1.10 வரை
**வஜ்ரம்**
பி.ப 1.10 - 23.03.2022
காலை 10.20 வரை

**திதி: அமர பட்ச பஞ்சமி**
காலை 6.24 - 23.03.2022
அதிகாலை 4.21 வரை

**முற்கரணம்: பாலவம்**
காலை 6.24 வரை
**பிற்கரணம்: கௌலவம்**
காலை6.24- மாலை 5.23

**சுப நேரங்கள்**
காலை 10.48 - பி.ப 12.17

**அசுப நேரங்கள்**
**ராகு காலம்**
மாலை 3.19 - 4.50

**குளிகை காலம்**
பிற்பகல் 12.18 - 1.48
**எமகண்ட காலம்**
காலை 9.16 - 10.47
**துர் முகூர்த்தம்**
காலை 8.39 - 9.28
இரவு 11.06 - 11.54

**லோகநாயகி ஸஹஸ்ர சீர்ஷ வதனா அன்னை பிரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி**

**மேஷம்:** சகோதரர்களுடன் இன்று மகிழ்வான நாளாக அமையலாம். ஆன்மீகவாதியின் சந்திப்பு மன அமைதிதரலாம். பரம்பரை தொழில் இலாபம் மேம்படலாம். பணியிடங்களில் உங்களுக்கு அதிகாரம் கிடைக்கப்பெறலாம். தடைப்பட்ட வேலைகள் சிறப்புற நிறைவேறலாம்.
சந்திராஷ்டமம்:அசுவினி நட்சத்திரத்திற்கு பி.ப 2.33 - 23.03.2022 பிற்பகல் 1.13 வரை

**ரிஷபம்:** வருவாய் அதிகரிப்பால் மகிழ்ச்சி உண்டாகலாம். எந்த செயலிலும் வீட்டின் மூத்தவர்களின் ஆலோசனை நன்மை தரலாம். உங்கள் பேச்சுத்திறனால் அனைவரிடமும் ஈர்ப்பு உண்டாகலாம். உங்கள் பொறுப்புகளில் கவலை தோன்றலாம்.

**மிதுனம்:** பிள்ளைகளின் சாதனைகளால் மகிழ்ச்சி உண்டாகலாம். மற்றவர்களுக்கு உதவும் சாதகமான நிலை தோன்றலாம். பிறரால் பரிந்துரைக்கப்படும் புதிய முதலீடு இன்று தவிர்ப்பது நல்லது. இறையருளால் இன்றைய நாள் இனிமையாக இருக்கலாம்.

**கடகம்:** தேவையற்ற ஆடம்பரங்களை தவிர்ப்பது நல்லது. புதிய சொத்து வாங்கும் திட்டம் உருவாகலாம். எதிர்காலத்திற்கான புதிய முடிவுகள் இன்று எடுப்பதை தவிர்ப்பது நன்மை. உறவுகளுடன் உங்கள் மனக்கவலையை பகிர்ந்து ஆறுதல் பெறலாம். செலவுகளின் கட்டுப்பாட்டில் கவனம் தேவைப்படலாம்.

**சிம்மம்:** வணிகத்தில் நல்ல ஒப்பந்தம் கிடைக்கப் பெறலாம். குடும்பத்தில் ஒரு திருமணத் திட்டம் உருவாகலாம். தொழில் முறை முன்னேற்ற சந்தர்ப்பம் கிடைக்கலாம். அன்பை விட சக்தி வாய்ந்த இணக்கமான இயல்பு நன்மை தரலாம். உங்கள் சில விருப்பங்கள் நிறைவேறலாம்.

**கன்னி:** வாழ்க்கைத்துணையுடன் கருத்து வேறுபாடுகள் மறந்து இருப்பது நன்மை. உணவு பழக்கங்களில் செரிமான பிரச்சினை தரும் உணவுகளை எடுப்பதில் கவனம் தேவைப்படலாம். வீட்டைத் திருத்தும் பணிகளில் செலவு ஏற்படலாம். வர தாமதமான பண வரவுகள் கிடைப்பதில் மகிழ்ச்சி உண்டாகலாம்.

**துலாம்:** வணிகத்தில் சாதகமான நாளாக அமையலாம். திறமைகள் மேம்படும். வாழ்க்கைத்துணையின் ஆதரவும், அன்பும் மகிழ்ச்சி தரும். சரியான வழியில் செயல்படுவது நல்ல நிலைமையை தோற்றுவிக்கும். நண்பர்களுடன் மகிழ்வான நாளாக அமையலாம். தன்னம்பிக்கை அதிகரிக்கலாம்.

**விருச்சிகம்:** படைப்புத்துறை சம்பந்தப்பட்ட வேலைகளில் சாதகமான நிலை உண்டாகலாம். வணிகத்தில் விற்பனை குறையலாம். பணிகளில் நிதானம் மற்றும் அமைதி தேவைப்படலாம். சில விடயங்களில் கவலை தோன்றலாம். இறைவணக்கம் நன்மை.

**தனுசு:** சந்தைப்படுத்தும் தொழில் சம்பந்தப்பட்ட செயல்களில் நன்மை கிடைக்கலாம். உங்கள் ஆளுமை திறனால் அனைவரும் கவரப்படலாம். அரசாங்க சம்பந்தப்பட்ட வேலைகள் சிறப்புற நிறைவேறலாம். வேலைகளில் பணித்திறனை மேம்படுத்த அதிக முயற்சி தேவைப்படலாம்.

**மகரம்:** வங்கி சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் நீங்கப்பெறலாம். பிள்ளைகளின் சில செயல்களில் கவலை தோன்றலாம். நண்பர்களுடன் இணைந்து புதிய தொழில் தொடங்கலாம். தம்பதியரிடையே நல்லிணக்கம் நிலவும். தொழில் சம்பந்தப்பட்ட சில இலட்சியம் நிறைவேறலாம்.

**கும்பம்:** புதிய தொழில் அல்லது வேலையில் தடைகள் ஏற்படலாம். புதிய முதலீடுகளை நன்கு ஆய்வு செய்த பின், செய்வது நல்லது. நல்ல சந்தர்ப்பத்தை இழக்க வைக்கும் ஒழுக்கமற்ற அணுகுமுறை தவிர்ப்பது நன்மை. ஆன்மீக செயல்களில் ஈடுபாடு அதிகரிக்கலாம். இறைவணக்கம் தேவை.

**மீனம்:** பிறருடன் உரையாடும்போது பேசும் சொற்களில் கண்ணியம் தேவைப்படலாம். அன்புக்குரியவர்களுடன் வாக்குவாதம் தவிர்ப்பது நன்மை. வணிகத்தில் இன்று கவனம் தேவைப்படலாம். உடல் நலத்திலும் சிறிய கவனம் தேவைப்படலாம். இறைவணக்கம் நன்மை.
சந்திராஷ்டமம்: ரேவதி நட்சத்திரத்திற்கு பிற்பகல் 2.33 வரை

# எரிவாயு வரிசையினால் தர்கா நகரில் நேற்று அமைதியின்மை



அளுத்கம, தர்கா நகரில் எரிவாயு வரிசையில் காத்திருந்த சிலருக்கும் பொலிஸ் மற்றும் எரிவாயு விற்பனை செய்யும் நிலைய பணியாளர்களுக்கும் இடையில் நேற்று (21) அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

அந்த நகரின் பொலிஸ் சோதனைச்சாவடி, பிரதேச சபையின் உபகாரியாலயம் மற்றும் தபால் அலுவலகம் என்பவற்றை அண்மித்த பகுதிகளில் நீண்ட எரிவாயு வரிசையில் இருந்த மக்கள் தொகையில், 300 பேருக்கு எரிவாயு கிடைக்கவில்லை என தெரிவித்து மக்கள் அதிருப்தியடைந்தமையினால் இந்நிலை உருவாகியுள்ளது.

வேலைத்தளங்களுக்கு விடுமுறையை அறிவித்துவிட்டு காலையிலிருந்து வரிசையில் காத்திருந்து விட்டு வெருங்கையோடு மீண்டும் வீடு திரும்பிய மக்கள், வரிசையில் காத்திருக்கும் மக்களுக்கு எரிவாயு இருக்கும் அளவை குறிப்பிட்டு டோக்கன் வழங்கவோ அல்லது மாற்று வழிகளில் மக்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுத்திருந்தால் தாம் இவ்வாறு சுற்றித்திரிந்து நேரத்தை வீணடிக்க வேண்டிய அவசியம் இல்லை எனவும் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

காலை நான்கு மணி முதல் எரிவாயு லொறி வரும் வரை வரிசையில் காத்திருந்தாலும், 250 பேருக்கு மாத்திரமே எரிவாயு பெற்றுக்கொடுக்க கூடிய சூழ்நிலையே காணப்படுவதாக அவ்விடத்திலிருந்த பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

தூரப் பிரதேசங்களிலிருந்து வருபவர்கள் அந்த எரிவாயு பெற்றுக்கொடுக்கும் இடங்களில் நபர்களை நிறுத்தி 5 அல்லது ஆறுக்கு மேற்பட்ட எரிவாயு சிலிண்டர்களை பெற்றுக்கொள்வதாகவும் மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

# 20 ரூபா மதிப்புள்ள இரண்டு நினைவு நாணயங்கள் வெளியீடு








கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தினதும் இந்நாட்டின் முதலாவது சனத்தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பினதும் 150ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, 20 ரூபா பெறுமதியுள்ள இரண்டு புதிய நினைவு நாணயங்கள் வெளியிடப்பட்டன.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் திருமதி சந்திரிகா எல். விஜேரத்ன மற்றும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பி.எம்.பி.அனுரகுமார ஆகியோர் நேற்று (21) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நினைவு நாணயங்களை வழங்கி வைத்தனர்.

மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால், பிரதி ஆளுநர் என்.டி.ஜீ.ஆர் தம்மிக நாணயக்கார, நிதி அதிகாரி கே.எம். அபேகோன் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# ஐயாயிரம் கறவைப் பசுக்களை இறக்குமதி செய்ய தீர்மானம்

அடுத்த வருடத்திற்குள் ஐயாயிரம் கறவைப் பசுக்களை நாட்டிற்கு இறக்குமதி செய்ய தீர்மானித்துள்ளதாக விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பசும்பால் உற்பத்தியை மற்றும் பாவனையை அதிகரிக்கும் நோக்கில், பாரிய அளவிலான பால் பண்ணைகளை உருவாக்குவது அரசாங்கத்தின் முக்கிய நோக்கமாகும் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதனூடாக நாட்டின் பால் உற்பத்திகளை அதிகரிக்கக் கூடியதாக இருக்குமெனவும் நாட்டுக்குள்ளேயே புதிய தொழில்வாய்ப்புகளை உருவாக்க முடியுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தலைமன்னாரிலிருந்து இந்தியா வரை நீந்திச் சென்ற மாற்றுத் திறனாளி சிறுமி

## 13 மணி 10 நிமிட நேரத்தில் கடந்து சாதனை





(மன்னார் நகர் நிருபர்)

மும்பையைச் சேர்ந்த மாற்றுத்திறனாளியான சிறுமி ஒருவர் நேற்று முன்தினம் (20) தலைமன்னார் முதல் தனுஷ்கோடி அரிச்சல் முனை வரையிலான பாக் ஜலசந்தி கடல் பகுதியில் 13 மணி 10 நிமிட நேரத்தில் நீந்தி கடந்து சாதனை படைத்துள்ளார்.

மும்பையில் உள்ள இந்திய கடற்படை நிலையத்தில் பணிபுரியும் மதன் ராய். அவரது மனைவி ரெஜினா ராய். இவர்களது மகள் ஜியாராய் (வயது-13). குறித்த சிறுமி ஆட்டிசம் ஸ்பெக்டரம் பாதிப்பிற்குள்ளானவர். மேலும் இச் சிறுமி வாய் பேச முடியாத மாற்றுத்திறனாளி.

இவர் மும்பை கடற்படை பள்ளியில் படிக்கிறார். கடந்த 2021ஆம் ஆண்டு மும்பை கடலில் 36 கிலோ மீற்றர் நீந்தி சாதனை படைத்தார். இவரது சாதனையை பிரதமர் நரேந்திர மோடி, மான் கி பாத் நிகழ்ச்சியில் பாராட்டினார்.

இந்நிலையில் இலங்கையின் தலைமன்னார் முதல் தனுஷ்கோடி அரிச்சல்முனை வரை 29 கிலோ மீற்றர் தொலைவுள்ள பாக் ஜலசந்தி கடற்பகுதியை நீந்தி கடப்பதற்காக கடந்த மாதம் டெல்லியில் உள்ள வெளியுறவுத்துறை, பாதுகாப்புத்துறை அமைச்சகங்கள் மற்றும் இலங்கை தூதரகத்திற்கு அனுமதி கோரி கடிதம் அனுப்பியிருந்தார்.

இந்திய-இலங்கை இரு நாட்டு அனுமதியும் கிடைத்த நிலையில் இலங்கையிலுள்ள தலைமன்னாரிலிருந்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (20) அதிகாலை 4.22 மணிக்கு மும்பையை சேர்ந்த மாற்றுத்திறனாளி சிறுமி நீந்த ஆரம்பித்தார்.

மதியம் 02.10 மணியளவில் இலங்கை- இந்திய சர்வதேச எல்லையை குறித்த சிறுமி வந்தடைந்தார். மாலை 5.32 மணியளவில் தனுஷ்கோடி அரிச்சல் முனையை வந்தடைந்தார்.

குறித்த மாற்றுத்திறனாளி சிறுமி சுமார் 13 மணிநேரம் 10 நிமிடத்தில் கடந்துள்ளார். கடலில் நீந்தி வந்த சிறுமியை தமிழக காவல்துறை டி.ஜீ.பி சைலேந்திரபாபு பூங்கொத்து கொடுத்து வரவேற்று சிறுமியை வாழ்த்தினார்.

மேலும் ஆட்டிசம் பாதிக்கப்பட்ட குழந்தைகளினால் எதையும் சாதிக்க முடியும் என்பதற்கு ஜியாராய் ஒரு எடுத்துக்காட்டு. கடலில் உள்ள பல சவால்களை கடந்து சிறுமி சாதனை படைத்துள்ளதாக சைலேந்திர பாபு சிறுமியை பாராட்டினார்.

இவர்களுக்கு உதவியாக இலங்கை கடற்படையின் ரோந்துப்படகு சர்வதேச எல்லை வரையிலும், இந்திய கடல் பகுதியில் மெரைன் பொலிஸார் மற்றும் இந்திய கடலோர காவல்படையின் கப்பலும் பாதுகாப்பை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# அறநெறி பாடசாலை மாணவர்களுக்கு புத்தகங்கள் வழங்கி வைப்பு





இங்கிரிய, றைகம், மேற்பிரிவு ஸ்ரீகுறிஞ்சி மகாமாரி அம்மன் ஆலயத்தில் இயங்கி வரும் வாணி அறநெறி பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசப் புத்தகங்கள் மற்றும் ஆன்மீக நூல்களை கொழும்பு தமிழ்ச் சங்கத்தினர் நேற்று முன்தினம் வழங்கினர்.

சமூக மேம்பாட்டுக் குழுவின் செயலாளர் க. செந்தில்குமாரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அமரர் அன்னலட்சுமி சிவபிரகாசத்தின் நினைவாக அவரின் புதல்வர் வைத்திய கலாநிதி அனுஷ்யந்தனின் அனுசரணையில் நடைபெற்றது.

தமிழ்ச் சங்கத் தலைவர் ந.காண்டீபனின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சமூக செயற்பாட்டாளர்கள் திருமதி லீலா மோகனசுந்தரம், பவானி முந்தன் உள்ளிட்டோர் கலந்து கொண்டதுடன் நிகழ்ச்சிக்கான ஒருங்கமைப்பை ஹொரணை பிரதேச சபை உறுப்பினர் எம். நடராஜா செய்திருந்தார்.

நிகழ்வில் வாணி அறநெறி பாடசாலை மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளுடன், ஸ்ரீ குறிஞ்சி மகாமாரி அம்மனின் வரலாற்றுப் பெருமைகளை சொல்லும் சிறப்பு மலரின் சிறப்பு பிரதிகள் தமிழ்ச் சங்க தலைவர் மற்றும் பிரமுகர்களுக்கு கையளிக்கப்பட்டது.



ஒருகொடவத்த பிரதேசத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்வதற்காக மக்கள் நேற்று (21) வரிசையில் காத்திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இதேவேளை, நேற்றும் கொழும்பின் சில பிரதேசங்களில் எரிபொருள் பெற்றுக்கொள்ள மக்கள் காத்திருந்தனர். (படப்பிடிப்பு - பிரதீப் தம்பரகே, சமன் அபேசிறிவர்தன)

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, மார்ச் 22ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# வெளிநாட்டுக் கடன்களை நம்பியே...

''நிதிக் கொள்கைகளின் கையாள்கைகளில் ஒழுக்கமான போக்கில்லாமல், பொறுப்பின்றி வெளிநாட்டுக் கடன்களை வாரிக் கொட்டி, அதில் நாட்டைத் தொடர்ந்து நிர்வகித்துவந்த இதுவரைகாலமான அரசுகளின் செயற்பாட்டால்தான் நாடு இந்த மோசமான கட்டத்தை அடைந்திருக்கின்றது.

வருடா வருடம் வரவு-செலவுத் திட்டத்தில் கட்டுமட்டுமில்லாத பெரிய தொகை துண்டு விழும்போது அது பற்றிய சிரத்தையே கொள்ளாமல், கவலைப்படாமல் வெளிநாட்டுக் கடன்களை கணக்கு வழக்கின்றி பெற்று, நாட்டைத் திவால் நிலைக்குக் கொண்டுசென்றுள்ளன தொடர்ந்து மாறி மாறி அதிகாரத்துக்கு வந்த அரசுகள்.''

இவ்வாறு குற்றம் சுமத்தியிருக்கின்றார் 2016 முதல் 2019 வரை சுமார் மூன்றரை ஆண்டுகள் காலம் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராகப் பதவி வகித்த சிரேஷ்ட பொருளியல் நிபுணர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி.

நாடு சுதந்திரமடைந்த பின்னர் அதிகாரத்துக்கு வந்த அரசுகள் யாவையுமே நாட்டின் நிதி நிலைமையை ஸ்திரமானதாக மாற்றுவது குறித்து கவலைப்படாமல், அரசியல் பிரசாரத்துக்கான விடயமாக நிதி மற்றும் பொருளாதார விவகாரங்களைக் கையாண்டமையால்தான் நாடு இன்றைய பொருளாதாரத் தளர்வு நிலையை அடைந்துள்ளது என்று அவர் குற்றஞ்சுமத்துகிறார்.

அதிகாரத்தோடு சம்பந்தப்பட்டவர்களின் அரசியல் நிகழ்ச்சி நிரல் திட்டங்கள் நாட்டின் பொருளாதார ஸ்திர நிலைமை குறித்து கவனத்திற்கொள்ளவேயில்லை என்ற உண்மையையும் தமக்குரிய சொல்லாடல்களால் நாசூக்காக முன்வைக்கிறார் அவர்.

பொதுத்துறை நிர்வாகங்களிலுள்ள ஊழல்கள் தொடர்பாக விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் சாட்சியமளிக்கையிலேயே இந்தக் கருத்துகளை அவர் முன்வைத்தார்.

ஜனரஞ்சக அரசியல், வசதி வாய்ப்புகள், நிவாரணங்கள், மானியங்கள், உதவிகள், இலவசங்கள் பற்றிய எண்ண ஓட்டத்தில் மூழ்கிக் கிடக்கும் நமது வாக்காளர்கள், அரசியல் தலைமைகளின் இத்தகைய பொறுப்பற்ற போக்கால் நாட்டின் பொருளாதாரம் எத்தகைய மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுக்கொண்டிருக்கின்றது என்பதைப் பற்றிக் கவலைப்படாமலேயே பிரக்ஞையற்றே இருந்துவிட்டார்கள் என்பதுதான் உண்மை.

இப்போது நிலைமை கட்டுமீறி தலைக்கு மேல் போனதும் குய்யோ, முறையோ என்று குரல் எழுப்புகின்றோம்.

கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி சுட்டும் ஒரு விடயத்தை நாம் அனைவரும் ஒப்புக்கொண்டேயாக வேண்டும்.

சலுகைகள், கடன்கள், மானியங்கள் போன்றவை தாராளமாகக் கிட்டியமையால் பல தசாப்தங்களாக இலங்கையர்களாகிய நாம் எங்களுடைய வளங்களுக்கும், சக்திகளுக்கும் அப்பாற்பட்ட வாழ்க்கை ஒன்றை அதுபற்றிய பிரக்ஞையின்றி வாழ்ந்துவிட்டோம்.

ஆனால், அதே டாம்பீக வாழ்வுக்கு இனியும் கடன்கள், மானியங்கள், சலுகைகள் இல்லை என்பதையும், நமது எல்லைக்கு மீறிய அந்த வாழ்வுக்குரிய கடப்பாடுகளை நாம் இப்போது அப்படியே மீளச் செலுத்தியே ஆகவேண்டும் என்பதையும் உணர்ந்துகொள்ளும்போது அந்த யதார்த்தத்தை ஏற்க மறுத்துத் துடிக்கின்றோம்.

கடந்த தலைமுறையில் எம் முன்னோரும், இந்தத் தலைமுறையில் நாமும், நமது அடுத்த தலைமுறைக்குத் தேடி வைத்துச் செல்கின்ற பின்னடைவுப் பிணி இதுதான்.

இந்தப் பிணியை நம் மீதும், நம் நாட்டின் மீதும் திணித்த அரசியல் தலைமைகள் குறித்து நாம் இன்னும் புரிந்துகொள்ளாமல் இருக்கின்றமைதான் நமது பேதமை, மடமை, அறியாமை எல்லாமே.

இந்த சூழ்நிலைக்குள் மற்றுமொரு கடனுக்காக இலங்கை சீனாவிடம் கையேந்தியிருக்கிறது. இந்தியாவிடமிருந்து உதவிகளைப் பெற்று அந்த சூடு ஆறுவதற்கு முன்னரே சீனாவிடம் ஓடியிருக்கிறது இலங்கை. பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தடுமாறி, 1 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் மற்றும் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் வசதியையும் இலங்கை அதிகாரிகள் சீனாவிடம் கோரியுள்ளனர்.

பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் இலங்கை, சீனாவையும், இந்தியாவையும் நம்பியிருக்கிறது.

ஏற்கனவே சீனாவின் கடனை அடைக்கத் தடுமாறும் இலங்கை சீனாவிடமே மீண்டும் கடன் கேட்டிருக்கிறது. இந்தியாவிடம் வாக்குறுதிகளை வழங்கிப் பெற்று மறுபுறம் உடனடியாக சீனாவிடம் சென்றதன் மூலம் இலங்கை எவ்வளவு விரக்தியில் இருக்கிறதென்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

வெளிநாட்டுக் கடன்களையே நம்பி வாழும் இலங்கையின் எதிர்காலத்தினை நினைக்கத் துயரமாக இருக்கிறது.



# புற்றுநோயைப் புகுத்தும் புதிய பக்டீரியா!

அவர் 50 வயது நிரம்பிய சுமை தூக்கும் தொழிலாளி. பல் ஈறுகளில் வீக்கம் ஏற்பட்டதும் சிகிச்சைக்குச் சென்றார். அவருக்கு வாய் நலம் மிகவும் கெட்டுப்போயிருந்தது. காரணம், புகையிலை மெல்லும் பழக்கம். அதை விட்டொழிக்க வேண்டும் என்று பல் மருத்துவர் வலுவாக எச்சரித்தார். அந்தத் தொழிலாளி அதனை நிராகரித்தார்.

ஆறு மாத இடைவெளியில் மறுபடியும் அவருக்குப் பற்களில் பிரச்சினை. அப்போதும் புகையிலைப் பழக்கத்தை அவர் கைவிடவில்லை. அடுத்த சில மாதங்களில் வாய்க்குள் ஆறாத புண்கள் வந்து படுத்தின. இந்த முறை அவருக்கு வாயில் புற்றுநோய் இருப்பதாக சோதனை முடிவுகள் முத்திரை குத்தின. இப்போது அவர் புற்றுநோய் மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கிறார்.

**வாய் நலம் முக்கியம்**

நம் வாய்க்குள் சாதாரணமாகவே 400இற்கும் மேற்பட்ட பக்டீரியா இனங்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றன. காலையில் எழுந்ததும் பல் துலக்கி, ஒவ்வொரு முறை உணவு சாப்பிட்டதும் நன்றாக வாயைக் கொப்பளித்து, இரவிலும் ஒருமுறை பல் துலக்கி வாய் நலம் காத்தால், இந்த பக்டீரியாக்கள் சமர்த்தாகவே இருக்கின்றன. புகைபிடிப்பது, புகையிலை மெல்லுவது, பாக்கு மற்றும் பான்மசாலா பயன்பாடு போன்றவற்றால் வாய் நலம் கெடும்போது, இந்த பக்டீரியாக்கள் தூண்டிவிடப்படுகின்றன.

அதன் விளைவாக, அவை கெடுதல் செய்யும் பக்டீரியாக்களாக மாறிவிடுகின்றன. அப்போது, ஈறுகள் அடிக்கடி வீங்குகின்றன. வீக்கத்தில் சீழ் பிடிப்பது, பற்களில் சொத்தை விழுவது, வாய்ப்புண் எனப் பலதரப்பட்ட பிரச்சினைகளை அவை கொண்டுவருகின்றன. சமயங்களில் அவை வாய்க்குள் புற்றுநோயை உண்டுபண்ணும் அளவுக்கு வீரியமும் பெற்றுவிடுகின்றன. அப்படி அண்மையில் கண்டறியப்பட்ட பக்டீரியா ஒன்றின் பெயர்தான் 'ஃபியூசோபாக்டீரியம் நியூக்ளியேட்டம்' (Fusobacterium nucleatum).

கட்டுரையின் ஆரம்பத்தில் அறிமுகமான சுமை தூக்கும் தொழிலாளிக்குப் புற்றுநோயைப் புகுத்தியது இந்த பக்டீரியாதான்.

**புற்றுநோய்த் தொற்றுக் கிருமிகள்**

உடலில் நோய்த் தொற்றுகளை ஏற்படுத்தும் பக்டீரியா மற்றும் வைரஸ் இனங்களில் சில வகை மட்டும் புற்றுநோயையும் உண்டுபண்ணும் என்பது ஏற்கனவே தெரிந்த உண்மைதான்.

உதாரணத்துக்கு, இரைப்பையில் குடித்தனம் நடத்தும் 'ஹெலிக்கோபாக்டர் பைலோரி' (Helicobacter pylori) எனும் பக்டீரியா இரைப்பையில் புற்றுநோயை ஏற்படுத்தும். கல்லீரலைப் பாதிக்கும் 'ஹெபடைடிஸ் – பி வைரஸ்' (Hepatitis-B Virus-HBV) 'ஹெபடைடிஸ் – சி வைரஸ்' (Hepatitis-C Virus-HCV) ஆகியவை கல்லீரல் புற்றுநோயை ஏற்படுத்துகின்றன. பெண்களைப் பாதிக்கும் 'ஹியுமன் பாப்பிலோமா வைரஸ்' (Human Papilloma Virus- HPV) கருப்பை வாய்ப் புற்றுநோயை ஏற்படுத்தும்.

உலகளவில் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து அறியப்பட்ட புற்றுநோய்களில் 20 வீதம் வரை பல வகைத் தொற்றுக்கிருமிகளால் ஏற்பட்டுள்ளதாக புள்ளிவிவரங்கள் உறுதிசெய்துள்ளன. இந்த சதவீதம் இந்தியா போன்ற வளரும் நாடுகளில் இன்னும் அதிகமாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

**புற்றுநோய்க்கு வித்தாகும் புகையிலை**

இந்தச் சூழலில், மும்பையில் உள்ள டாட்டா நினைவு மையத்தில் ஆய்வாளர் அமிட் தத் (Amit Dutt) தலைமையில் இயங்கும் உயர்தர புற்றுநோய் சிகிச்சை, ஆராய்ச்சி மற்றும் கல்வி மையத்தினர் (ACTREC-Tata Memorial Centre), 'ஹியுமன் பாப்பிலோமா வைரஸ்' தொடர்பான மரபணு பகுப்பாய்வுச் சோதனைகளில் ஈடுபட்டிருந்தனர். இந்த வைரஸானது கர்ப்பப்பை வாய் (Cervix) மட்டுமல்லாமல் ஆண், பெண் இருபாலரின் வாய் மற்றும் தொண்டையிலும் புற்றுநோயை ஏற்படுத்தும் வல்லமை பெற்றது. எனவே, வாய்ப் புற்றுநோயுள்ளவர்களின் மரபணுக்களில் ஹியுமன் பாப்பிலோமா வைரஸுடன் வேறு ஏதாவது புற்றுக்காரணிகளோ அல்லது தொற்றுக் கிருமிகளோ இணைந்துள்ளனவா என்பதைக் கண்டறிவது அவர்களது ஆராய்ச்சியின் நோக்கம்.

அப்போது, இரண்டு அறிவியல் உண்மைகளை அவர்கள் கண்டறிந்தனர். முதலாவது, இந்தியப் புற்றுநோயாளிகளிடம் 1,058 வகையான தொற்றுக் கிருமிகள் இணைந்தே காணப்பட்டன என்றாலும், அவற்றில் பெரும்பாலானவை புற்றுக் காரணிகளாக இல்லை என்பது. அடுத்தது, புகையிலையை மெல்லும் பழக்கம் உள்ள வாய்ப்புற்று நோயாளிகளுக்கு 'ஃபியூசோபாக்டீரியம் நியூக்ளியேட்டம்' எனும் பக்டீரியா தொற்றிருப்பது தெரியவந்தது.

இதுவரை இந்த பக்டீரியா மலக்குடல் புற்றுநோய்களை (Colorectal cancers) ஏற்படுத்தும் கிருமியாகத்தான் அறியப்பட்டது. இப்போது புதிதாக வாய்ப் புற்றுநோய்க்கும் இது காரணமாகிறது எனும் உண்மை ஆய்வாளர்களை அதிர்ச்சியடையச் செய்தது. அதேசமயம், இந்த ஆய்வின் வழியாக வாய்ப் புற்றுநோயாளிகளுக்கு 'ஃபியூசோபாக்டீரியம் நியூக்ளியேட்டம்' தொடர்பில் சிகிச்சை கொடுத்தால் புற்றுக்கட்டி குணமாகிறது எனும் புதிய வழி அவர்களை மகிழ்ச்சியடையச் செய்தது.

**புற்றுநோய் எப்படி ஏற்படுகிறது ?**

வாய் நலம் கெடும்போது, அங்கு புற்றுநோய் தோன்றுவதற்குத் தேவையான 'முன்னழற்சி நுண்சூழலை' (Pro-inflammatory tumour-promoting micro environment) இந்த பக்டீரியாக்கள் உருவாக்குகின்றன. மேலும், புற்றுநோயைத் தடுக்கும் தடுப்பாற்றல் அணுக்களுக்குப் பல வழிகளில் இவை இடர்பாடுகளைத் தருகின்றன. முக்கியமாக, புற்றுசெல்களைத் தாக்கி அழிக்கும் ஆற்றலுள்ள 'இயற்கைக் கொல்லி செல்'களையே (Natural killer cells) இவை அழித்துவிடுகின்றன. இப்படித் தொடர்ச்சியான தாக்குதல்கள் மூலம் இவை வாய்க்குள் புற்றுநோயைப் புகுத்திவிடுகின்றன. அடுத்து, இந்த பக்டீரியாக்களுக்கும் புற்றுநோய்த் தடுப்பாற்றல் அணுக்களுக்கும் இடையில் நடக்கும் போரில் ஐ.ஜி.ஏ, ஐ.ஜி.ஜி. ஆகிய எதிரணுக்கள் (I.G.A, I.G.G. antibodies) உருவாகின்றன. ஒருவருக்கு 'ஃபியூசோபாக்டீரியம் நியூக்ளியேட்டம்' தொற்று இருக்கிறதா என்பதை இந்த எதிரணுக்களை அளப்பதன் மூலம் தெரிந்துகொள்ள முடியும். மேலும், இந்த பக்டீரியாக்களை அழிக்கும் திறனுள்ள நுண்ணுயிர்க்கொல்லி மருந்துகள் நம்மிடம் உள்ளன. எனவே, இந்த பக்டீரியாக்களுக்குப் பயப்படத் தேவையில்லை என்பது ஓர் ஆறுதல்.

**என்ன செய்யலாம் ?**

2020இல் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரப்படி, இந்தியாவில் ஆண்டுதோறும் ஏற்படும் புற்றுநோய்களில் 27 வீதம் புகையிலைப் பழக்கத்தால் ஏற்படும் புற்று வகையாகவே இருக்கிறது. ஆண்டுதோறும் பத்து இலட்சத்துக்கும் அதிகமானோர் இந்த வழியில் இறக்கின்றனர். இந்த இறப்புகளைத் தவிர்க்க வேண்டுமானால், புகையிலை மெல்லும் பழக்கம் நாட்பட்டு இருப்பவர்களிடம் வருடந்தோறும், 'ஃபியூசோபாக்டீரியம் நியூக்ளியேட்டம்' தொற்று இருக்கிறதா என்பதை எலிசா பரிசோதனையில் தெரிந்துகொள்ளும் வழிமுறையை சமூக அளவில் நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியம். அவ்வாறு இருப்பது தெரிந்தால், ஆரம்பத்திலேயே தகுந்த நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளைக் கொடுத்து சிகிச்சை செய்ய வேண்டியது முக்கியம்.

**கு.கணேசன், பொதுநல மருத்துவர்,**

***நன்றி - தமிழ் இந்து***

## தவக்கால சிந்தனை



***என் சகோதர சகோதரிகளுள் ஒருவர் எனக்கு எதிராகப் பாவம் செய்துவந்தால் நான் எத்தனை முறை அவரை மன்னிக்க வேண்டும்?***

மன்னிப்பு என்பது எளிதில் நிகழும் காரியமல்ல. சாதாரண மனித இயல்பைப் பார்த்தால் நமக்கு எதிராக யாராவது தீங்கிழைக்கும் வேளையில் அவர்களை உடனடியாகத் தண்டிக்கத்தான் மனம் வரும்; அல்லது பழிக்குப்பழி என்னும் எண்ணம் நம்மை ஆட்கொண்டுவிடும். எனவே, பேதுரு இயேசுவிடம் கேட்ட கேள்வி நம் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் எழுகின்ற, எழக் கூடுமான கேள்வியே என்றால் மிகையாகாது.

எத்தனை முறை மன்னிப்பது என்று பேதுரு கேட்ட கேள்விக்கு இயேசு வழங்கிய பதில் என்ன? ஏழுமுறை மட்டும் மன்னித்தால் போதாது; எழுபது தடவை நீ மன்னிக்க வேண்டும். இதை விளக்கிட இயேசு ஓர் உவமையைப் பயன்படுத்துகிறார். மிகப் பெரிய தொகையைக் கடனாக வாங்கிய ஒருவருடைய முழுக்கடனும் மன்னிக்கப்பட்டது. ஆனால், அவரோ தன்னிடமிருந்து மிகச் சிறிய தொகையைக் கடனாகப் பெற்ற ஒருவருக்கு மன்னிப்பு வழங்க மறுத்துவிட்டார். பிறருடைய குற்றங்களை நாம் மன்னிக்காவிட்டால் கடவுளும் நமக்கு மன்னிப்பு அருளமாட்டார் என இயேசு இக்கதை வழியாக நமக்கு போதிக்கிறார். அன்பின் உயரிய வெளிப்பாடு. நமக்கு நன்மை செய்தவர்களுக்கு நாம் நன்மை செய்ய விரும்புவது இயல்பு. ஆனால், நமக்குத் தீமை செய்தவர்களை மன்னித்து அவர்களுக்கு நன்மை செய்வது கடினமான செயல்.



# சர்வதேச நீர் நாள்

உலக நீர் நாள் (World Day for Water அல்லது World Water Day), ஐக்கிய நாடுகள் அவையின் தீர்மானத்துக்கிணங்க ஆண்டுதோறும் மார்ச் 22 ஆம் திகதி உலகெங்கும் கொண்டாடப்படுகிறது.

1992 ஆம் ஆண்டில் பிரேஸிலில் ரியோ டி ஜெனிரோ நகரில் இடம்பெற்ற சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சி குறித்து நடைபெற்ற ஐ.நா. பேரவைக் கூட்டத்தொடரில் வைக்கப்பட்ட 21ஆம் நூற்றாண்டின் செயற்றிட்டத்தின்படி 1993, ஜனவரி 18ஆம் திகதி 47ஆவது ஐ.நா. பேரவை கூட்டத்தொடர் 193ஆம் தீர்மானத்தை நிறைவேற்றியது. அத்துடன் 1993ஆம் ஆண்டுமுதல் ஒவ்வொரு ஆண்டின் மார்ச் 22ஆம் திகதி உலக நீர் வள நாளாக கொண்டாடத் தீர்மானிக்கப்பட்டது. நீர் வளத்தின் ஒட்டுமொத்தத் திட்டத்தையும், நிர்வாகத்தையும் மேம்படுத்தி, நீர் வள பாதுகாப்பை வலுப்படுத்தி, நாள்தோறும் கடுமையாகியுள்ள நீர்ப் பற்றாக்குறை பிரச்சினையை தீர்ப்பதென்பது தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் நோக்கமாகும். அதேவேளை, மக்களிடையே விரிவாகப் பிரசாரம் செய்து மக்களிடையே அந்தந்த நாட்டின் நீர் வளப் பாதுகாப்பு பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

2003 இல் 58ஆவது ஐ.நா. பேரவைக் கூட்டத் தொடரில் நிறைவேற்ற தீர்மானம் ஒன்றின்படி 2005 முதல் 2015 வரையான காலப்பகுதி "பத்தாண்டுகளுக்கு உயிர் வாழ்வதற்கு நீர்" எனும் அனைத்துலக செயற்றிட்ட காலமாக அறிவிக்கப்பட்டது. 2005ஆம் ஆண்டு மார்ச் 22ஆம் திகதியன்று இந்த நடவடிக்கை அதிகாரபூர்வமாக நடைமுறைக்கு வந்தது.

நீர்த்திட்டம் குறித்து ஈடுபட்டுள்ள நிறுவனங்களில் ஏதாவது ஒன்று ஒவ்வோர் ஆண்டும் அனைத்துலக மட்டத்தில் நீர் வளப் பாதுகாப்புக் குறித்த செயற்றிட்டங்களை ஒருங்கிணைத்து அதனை உலக நீர் நாளில் முன்னெடுப்பதும் ஐ.நா. நிறுவனத்தின் திட்டமாகும்.

# இன்றைய நாளில்...

- 1829 – கிரேக்கத்துக்கான எல்லைகளை மூன்று வல்லரசுகளான பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா ஆகியன வரையறுத்தன.
- 1867 – இலங்கை ரயில் போக்குவரத்து வரலாற்றில் முதல் தடவையாக ரயில் இழுபொறி இலங்கையின் உயர் புள்ளிகளில் ஒன்றான கடுகண்ணாவையை அடைந்தது.
- 1916 – சீனாவின் கடைசிப் பேரரசர் யுவான் சிக்காய் முடிதுறந்தார். சீனக் குடியரசு உருவானது.
- 1945 – அரபு நாடுகள் கூட்டமைப்பு அமைக்கப்பட்டது.
- 1960 – ஆர்தர் சாவ்லொவ், சார்ல்ஸ் டவுன்ஸ் ஆகியோர் சீரொளிக்கான (Lazer) முதலாவது காப்புரிமத்தைப் பெற்றார்கள்.
- 1965 – இலங்கையில் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து டட்லி சேனநாயக்க தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைத்தது.
- 1982 – நாசாவின் கொலம்பியா விண்ணோடம் ஏவப்பட்டது.
- 1995 – சோவியத் விண்வெளி வீரர் வலேரி பொல்யாக்கொவ் விண்ணில் 438 நாட்களைக் கழித்துவிட்டு பூமிக்குத் திரும்பினார்.
- 1997 – ஹேல்-பொப் வால்வெள்ளி பூமிக்கு அருகில் வந்தது.

## நக்கல் நமசிவாயம்

ஜனாதிபதி பதவி விலகத் தீர்மானிச்சவரெண்டு வந்தது பொய்ச் செய்தியாம்..! பொய்ச் செய்திக்கு ஏன் பாருங்கோ ஜனாதிபதி அலுவலகம் மறுப்புத் தெரிவிக்கோணும்..?! எனக்கெண்டா விளங்கேல்ல..!



# ஓய்வூதிய பணிக்கொடையை தாமதமின்றி வழங்கக் கோரிக்கை

(சாய்ந்தமருது நிருபர்)

அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு வழங்க வேண்டிய ஓய்வூதிய பணிக்கொடைகளை மேலும் தாமதிக்காமல் உடனடியாக வழங்குமாறு ஓய்வூதியர்களின் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதனை வலியுறுத்தி மேற்படி அமைப்பின் செயலாளர் சரத் லால் பெரேராவினால் ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம் ஜகத் டி.டயஸுக்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அரசாங்க சேவையில் 20 முதல் 30 வருடங்களுக்கு மேல் சேவையாற்றிய பலருக்கு வழங்கப்பட வேண்டிய 24 மாதங்களுக்கான ஓய்வூதிய தொகையை உள்ளடக்கிய ஓய்வூதிய பணிக்கொடை 2020ஆம் ஆண்டுக்கு பின் ஓய்வுபெற்ற பலருக்கு இன்னும் வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருகிறது.

இக்கொடுப்பனவை உரிய காலத்திற்கு அரசு வழங்காமையால் சிரேஷ்ட பிரஜைகளுக்கு வழங்கப்பட்டுள்ள வங்கிச் சலுகையை பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. இதன் காரணமாக ஓய்வூதியர்கள் பொருளாதார நெருக்கடிகளுக்கும் மன உளைச்சலுக்கும் ஆளாகி வருகின்றனர். இது பெரும் அநீதியான செயற்பாடாகும்.

இவ் ஓய்வூதிய பணிக்கொடை கிடைக்கப் பெறாமையினால் தமது பிள்ளைகளின் திருமணம் போன்ற மங்கல காரியங்களை நடத்தவோ இறுதிக் காலத்தில் தமக்கான வீடொன்றை அமைத்துக் கொள்ளவோ தமது அந்திமகால தேவைகளை பூர்த்தி செய்யவோ முடியாத கையறு நிலையில் குறித்த ஓய்வூதியர்கள் திண்டாடி வருகின்றனர்.

எனவே இனியும் தாமதிக்காமல் உடனடியாக இக்கொடுப்பனவை வழங்க வேண்டும். இல்லையேல் ஓய்வூதிய திணைக்களத்தின் முன்னால் பாரிய ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை ஓய்வூதியர்கள் நடத்த நேரிடும் என அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

## தத்துவம் தங்கராசு



பேஸ்புக்கில் சிங்கள நண்பர் ஒருவர் பதிவொன்றை இட்டிருந்தார்.

இப்போதெல்லாம் அடிக்கடி எடுத்ததற்கெல்லாம் கோபிக்காதீர்கள். மக்கள் பலரும் ஆத்திரத்தில் இருக்கிறார்கள். கோபத்தினால் அடிதடி ஏற்பட்டு ஆஸ்பத்திரிக்கு சென்றால் அங்கு மருந்துகள் கூட கிடைப்பது அரிது. போக்குவரத்தில், இதர வேலைகளில் நிதானத்தை கடைபிடியுங்கள். ஆத்திரம் வந்து நீங்கள் நடந்து கொள்வதால் நீங்கள் தான் கஷ்டப்பட வேண்டும். பொறுமையைக் கடைப்பிடியுங்கள் என்று கூறியிருக்கிறார் அந்த நண்பர்.

உண்மைதான். இது தான் யதார்த் தம். அரசாங்கத்தின் மோசமான நிர்வாகம் மக்களை எவ்வளவு புடம் போட்டிருக்கிறது என்று நினைத்துக் கொண்டேன்.

# ஐக்கியத்துக்காக சேவையாற்றும் தந்தை செல்வா நற்பணி மன்றம்

தந்தை செல்வா நற்பணி மன்றம் க.பொ.த.சாதாரண தரப்பரீட்சை மாணவர்களுக்கு கணித, விஞ்ஞான கருத்தரங்கு உள்ளிட்ட பல்வேறு பணிகளை முன்னெடுத்து வருகின்றது.

தமிழர் வாழுகின்ற பிரதேசங்களில் மாணவர்களுக்கான இலவச புலமைப்பரிசில் கருத்தரங்குகளும் இதுவரை 986 பேருக்கு தந்தை செல்வா விருதுகளையும் வழங்கியிருக்கிறது.

2000ஆம் ஆண்டிலிருந்து மத்திய கொழும்பு இந்து வித்தியாலயத்தில் அறநெறி பாடசாலை ஒன்றை நடத்தி வருகின்றது. அறநெறி பாடசாலை மாணவர்களுடன் நாயன்மார்கள் குருபூசை, ஆறுமுக நாவலர், திருவள்ளுவர் குரு பூசை நடத்துவதோடு, மார்கழி மாத திருவாதிரை நடபஜனையை இன்று வரை நடத்தி வருகின்றது.

நாட்டின் இன ஐக்கியத்தையும் சகோதர தன்மையை வளர்ப்பதற்காகவும் இக்கட்டான காலகட்டத்தில் தெமட்டகொடையில் உள்ள பௌத்த விகாரையுடன் ஒன்றுகூடல் நடத்தியிருக்கிறது. இதுவரை சுமார் 21 ஆயிரம் மூக்கு கண்ணாடிகளை இன, மத, பேதமின்றி நாட்டில் உள்ள சகல மக்களுக்கும் வழங்கியிருக்கிறோம்.

# கத்தியை காட்டி உயிர் அச்சுறுத்தல் விடுத்து உணவகத்தில் பணம் திருட்டு

## சந்தேகநபர் துப்பாக்கிச்சூடு நடத்தி கைது

இரத்மலானை பிரதேசத்தில் உணவு விற்பனை நிலையமொன்றில் பணத்தை திருடிவிட்டு, அந்த உணவகத்தில் சேவையாற்றிக்கொண்டிருந்த பணியாளர்கள் இருவரை காயப்படுத்திவிட்டு தப்பித்துச் சென்றுகொண்டிருந்த நபரொருவர் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர் பயணித்த மோட்டார் சைக்கிள், கத்தி மற்றும் ரம்போ வகையைச் சேர்ந்த கத்தியொன்றும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சந்தேகநபர் ரம்போ வகையைச் சேர்ந்த கத்தியுடன் குறித்த உணவகத்துக்குள் நுழைந்துள்ளதுடன் கூரிய ஆயுதத்தைக் காட்டி கணக்காளருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்து பணத்தை திருடிச் சென்றுள்ளார்.

அதன் பின்னர் உணவகத்தில் சேவையிலிருந்த பணியாளர்களும் நுகர்வோரும் சந்தேகநபரை சுற்றிவளைத்து தாக்கியுள்ளனர். இருந்த போதிலும் தப்பித்துச் சென்று வீதியில் பயணித்த முச்சக்கரவண்டியை பலவந்தமாக நிறுத்தி அந்த மோட்டார் சைக்கிளில் தப்பித்துச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது, இரத்மலானை பேக்கரி சந்தி பிரதேசத்தில் இரவு நேரத்தில் சேவையாற்றிக்கொண்டிருந்த பொலிஸ் அதிகாரிகளினால் வீதியில் பாதுகாப்பின்றி பயணிக்கும் முச்சக்கரவண்டி தொடர்பில் தேடிப்பார்ப்பதற்காக சென்றிருந்தபோது அங்கிருந்து சந்தேகநபர் தப்பித்துச் சென்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் அதிகாரிகள் சந்தேகநபரை பின்தொடர்ந்து கைதுசெய்ய சென்றபோது சந்தேகநபர் பொலிஸ் அதிகாரிகளை கத்தியால் தாக்க முயற்சித்துள்ளார். இந்நிலையில், சந்தேகநபரின் காலுக்கு துப்பாக்கிச் சூடு நடத்தி அவரை கைதுசெய்ததாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கண் சத்திரசிகிச்சை பிரிவுக்கு தற்காலிகமாக பூட்டு

(யாழ். நிருபர்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் கண் சத்திரசிகிச்சை பிரிவின் செயற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக பதில் பணிப்பாளர் மு.நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

கண் சத்திர சிகிச்சைகள் நிறுத்தப்பட்டமை தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் மருந்துகளுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. அதனடிப்படையில் கண் சத்திரசிகிச்சைக்கு தேவையான மருந்துகள் இல்லாமையினால் அந்தப் பிரிவு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

மேலும் சில மருந்துப் பொருட்கள் குறைந்தளவிலேயே உள்ளன. ஆகையினால் மருந்துப்பொருட்களை பெற்றுக் கொள்வதற்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் நடப்பாண்டுக்கான முதல் செயற்குழு கூட்டம்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் நடப்பாண்டுக்கான (2022-2023) புதிய செயற்குழுவின் முதல் கூட்டம் கொழும்பில் நேற்று முன்தினம் (20) இடம்பெற்றது.

போரத்தின் புதிய தலைவி புர்கான் பீ இப்திகாரின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. உப தலைவர்களாக எம்.ஏ.எம் நிலாம், கலைவாதி கலீல், உப செயலாளர்களாக சாதிக் ஷிஹான், ஜாவித் முனவ்வர், உதவி பொருளாளராக ஜே.எம்.நாளிர், தேசிய அமைப்பாளராக மௌலவி எஸ்.எம்.எம். முஸ்தபா, ஊடக இணைப்பாளராக எம்.எஸ்.எம். ஸாகிர், சஞ்சிகை ஆசிரியர்களாக ஷாமிலா செரீப், ஷம்ஸ் பாஹிம், பயிற்சிப்பிரிவு பிரதானியாக சமீஹா சபீர், இணையத்தள ஆசிரியராக டீ.ஜீ.எம்.எஸ்.எம். ராபி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இச் செயற்குழு கூட்டத்தின் போது தலைவிக்கு உள்ள அதிகாரத்தில் தாஹா முஸம்மில், ஷம்ஸ் பாஹிம் ஆகியோர் செயற்குழுவில் இணைத்துக் கொள்ளப்பட்டதோடு, இவ்வருடத்துக்கான பல்வேறுபட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

அத்தோடு, பேராளர் மாநாட்டின் போது அதிகளவான உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க, முன்னாள் தலைவர் என்.எம். அமீன் செயற்குழுவில் இணைக்கப்பட்டார்.

இந்த வருடத்தின் முதல் இரண்டு வேலைத்திட்டங்களாக 56 வருடங்களுக்கு மேல் ஊடகத்துறையில் பணியாற்றி வரும் பொலன்னறுவை மாவட்டத்தைச் சேர்ந்த சுகவீனமுற்றுள்ள மூத்த முஸ்லிம் ஊடகவியலாளர் ஏ.எம். ரஷீதுக்கு பண உதவி வழங்குதல், 25 மாவட்டங்களையும் சேர்ந்த புதிய ஐம்பது ஊடகவியலாளர்களுக்கான ஆறு மாதகால தொடர் பயிற்சி வழங்குதல் என்ற முடிவுகள் எடுக்கப்பட்டதாகவும் போரத்தின் புதிய செயலாளர் எம்.ஜே.பிஸ்ரின் முஹம்மத் தெரிவித்தார்.

கடந்த 12ஆம் திகதி கொழும்பில் இடம் பெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் பேராளர் மாநாட்டின்போது புதிய தலைவியாக சிரேஷ்ட ஒலிபரப்பாளர் புர்கான் பீ இப்திகார், பொதுச் செயலாளராக சர்வதேச விருது வென்ற ஊடகவியலாளர் எம்.ஜே. பிஸ்ரின் முஹம்மத், பொருளாளராக ரொயிட்டர்ஸ் செய்தியாளர் சிஹார் அனீஸ் மற்றும் செயற்குழு உறுப்பினர்களாக சாதிக் ஷிஹான், ஜெம்சித் அசீஸ், எம்.ஏ.எம் நிலாம், கலைவாதி கலீல், ஜாவித் முனவ்வர், எஸ்.எம்.எம். முஸ்தபா, நுஸ்கி முக்தார், எம்.எப். ரிபாஸ், ஷாமிலா செரீப், சமீஹா சபீர், எம்.எஸ்.எம் ஸாகிர், டீ.ஜீ.எம்.எஸ்.எம் ராபி, எம்.எம். ஜெஸ்மின், ஜே.எம். நாளிர், சீ.எம். சுபைர் ஆகிய 18 பேர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தேசகீர்த்தி, தேசமான்ய பட்டம் வழங்கி வைக்கும் நிகழ்வு





(அஷ்ரப் ஏ சமத்)

பௌத்த மஹா சங்கத்திலுள்ள உயர்பீட நிறுவனத்தினர் வருடா வருடம் சமூகசேவை, மனிதாபிமான உதவியாளர்கள், அறிஞர்கள், கல்வியியலாளர்கள், வியாபாரிகளை இனங்கண்டு தேசகீர்த்தி, தேசபந்து மற்றும் மனித உரிமை சமூகசேவையாளர் பட்டம் வழங்கி கௌரவித்து வருகின்றனர்.

இந்நிறுவனம் நாடாளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டதொரு நிறுவனமாகும். இதில் பிராந்திய அகில இலங்கை பல்கலைக்கழக வேந்தர்கள், தலைவர்களை கொண்டுள்ள ஓர் பௌத்த அமைப்பாகும். இம்முறை மாத்தறையிலுள்ள விசுரேன புருவராம விகாரையில் வைத்து அண்மையில் 110 பேருக்கு பட்டங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

அதில் குருநாகலிலுள்ள வெடிங்றிங் ஜூவலரி ஜெம் தனியார் நிறுவனத்தின் உரிமையாளர் கலாநிதி ரயிஸ் மீரா அழைத்து பட்டம் வழங்கி கௌரவித்தார். இவர் நகை வியாபாரக் கிளைகளை குருநாகல், பம்பலப்பிட்டி, கல்முனையில் ஸ்தாபித்துள்ளார். அத்துடன் மனிதாபிமான மற்றும் வாழ்வாதார உதவிகளையும் குருநாகல் மாவட்டத்தில் செய்துவருகின்றார். அத்துடன் தேசிய ஒற்றுமைக்காக சேவையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ் வைபவத்திற்காக நாட்டிலுள்ள பிரதான நாயக்க தேரர்கள் கலந்து கொண்டு பட்டங்களை வழங்கி வைத்தனர். கதிர்காமம், திஸ்ஸமகாராம, வயம்ப, ருஹூனு பிரதான தேரர்கள் உட்பட பல்கலைக்கழகங்களது வேந்தர்கள், பௌத்த பீடங்களினது தலைவர்களும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## 21.03.2022 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 084 7274 | 1 41 72 |
| கனேடியன் டொலர் | 10 411 | 108 5138 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 30 4681 | 32 431 |
| யூரோ | 184 8331 | 2 5 6662 |
| ஜப்பான் யென் | 1 1170 | 1 2155 |
| சிங்கப்பூர் டொலர் | 085 2566 | 1 2 8827 |
| ஸ்ரேலிங் பவுன் | 238 70 2 | 252 2040 |
| சுவிஸ் பிரான்ங் | 173 5350 | 185 4403 |
| ஐ.அ.டொலர் | 153 5566 | 163 8868 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 618 2641 |
| குவைட் | குவைட் தினார் | 8 3 8812 |
| ஓமான் | ஓமான் றியால் | 603 1653 |
| கட்டார் | கட்டார் றியால் | 64 2417 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 62 2 1 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 63 7586 |

# நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வழி ஐக்கிய மக்கள் சக்தியிடமே உள்ளது

## எதிர்க்கட்சித் தலைவர் அகலவத்தையில் தெரிவிப்பு





தற்போது ஆழமான பாதாளத்தில் வீழ்ந்திருக்கும் நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப எந்தக் குழுவுக்குத் திறமை இருக்கிறது என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் மக்களுக்கு உள்ளது எனவும், இதனை உணர்ந்த மக்கள் நாளுக்கு நாள் ஐக்கிய மக்கள் சக்தியை சுற்றி அணிதிரண்டு வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தாங்க முடியாத வாழ்க்கைச் செலவு காரணமாக நாடு அதலபாதாளத்தில் வீழ்ந்துள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இந்நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் பணியையே உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளது எனவும் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அகலவத்தை தேர்தல் தொகுதியின் அமைப்பாளர் ஜகத் விதானவால் ஏற்பாடு செய்யப்பட்ட தொகுதி செயற்பாட்டாளர்களின் கூட்டம் நேற்று முன்தினம் (20) நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்நாட்டு மக்கள் மாற்றுமுறைக்கு பதிலாக புதிய வழியைக் கொண்டு அரசியல் ரீதியாக சிந்திக்கும் ஆற்றல் கொண்டுள்ளது. இதன் பிரகாரமே, நாட்டின் பிரதான எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி மக்களால் தெரிவு செய்யப்பட்டது.

இந்நாட்டின் அரசியல் வரலாற்றில் எதிர்க்கட்சியின் வகிபாகத்தை ஐக்கிய மக்கள் சக்தி முற்றாக மாற்றி அதற்கு புதிய அர்த்தம் கற்பித்தது.

தேசத்தை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்திற்கு அதிகாரம் இல்லாவிட்டாலும் ஐக்கிய மக்கள் சக்தி பங்களித்துள்ளது.

செயற்பட முடியாத பலவீனமான ஆட்சியை ஒரே தடவையில் வீட்டுக்கு அனுப்ப அணிதிரள வேண்டும். எதிர்க்கட்சி என்ற வகையில் ஐக்கிய மக்கள் சக்தியும் நாட்டுக்கு பெறுமதி சேர்க்கும் வகையில் செயற்பட்டு வருகிறோம் என்றார்.

# ஹட்டனில் முட்டை, கோழி இறைச்சி விலை உயர்வால் மக்கள் விசனம்

**(மனுர சுதத் செல்லஹேவா)**

ஹட்டன் பிரதேசத்தில் அத்தியாவசியப் பொருட்களுக்கான விலைவாசிகள் அதிகரிப்பு காரணமாக பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். குறிப்பாக, ஹட்டன் பகுதி மக்கள் தங்கள் சமையல் பொருட்கள் மற்றும் மரக்கறிகளை வாங்குவதில் பெரிதும் சிரமத்தை எதிர்நோக்கி வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

பொருட்களின் விலைகள் நாளுக்குநாள் அதிகரிப்பதால் தமது உணவுத்தேவையை எவ்வாறு பூர்த்திசெய்வது என்பது குறித்தும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, முட்டை மற்றும் கோழி இறைச்சியின் விலைகள் தாறுமாறாக உயர்ந்துள்ளதாகவும் தாங்கள் எதனை சமைத்து உண்பது என்றும் ஆதங்கப்படுகின்றனர்.

இந்த நிலைமைகளினால் அப்பகுதி மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

தற்போதைய இச்சூழ்நிலையில் இந்தப் பகுதியில் முட்டை ஒன்றின் விலை 32 ரூபா முதல் 33 ரூபா வரையிலும், கோழி இறைச்சி கிலோ 850 ரூபா முதல் 900 ரூபா வரையிலும் விற்பனை செய்யப்படுகின்றன. இதனால் முட்டை மற்றும் கோழி இறைச்சி சாப்பிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

கோழி தீவனத்தின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக கோழி மற்றும் முட்டை வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். எனினும், அதனை விலைகொடுத்து வாங்குவதற்கு மக்களிடம் போதுமான பணம் இல்லாததாலும் தாம் திண்டாடுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, எரிபொருள் விலை உயர்வு காரணமாக முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் அதிக விலையை அறவிடுவதாகவும் எரிபொருள் விலை உயர்வை பயன்படுத்தி தன்னிச்சையாக கட்டணங்களை வசூலித்து வருவதாகவும் அப்பகுதி மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

ஒரு கிலோமீற்றருக்கு சுமார் 150 ரூபாவை வசூலிப்பதால் கடும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக தெரிவிக்கும் குறித்த பகுதி மக்கள் இவ்வாறு விலைவாசி எகிறுவதால் எவ்வாறு தமது வாழ்க்கையை கொண்டு நடத்துவது என்றும் அங்கலாய்க்கின்றனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com



பிரவுன்லோ மகளிர் கழகத்தின் ஏற்பாட்டில் சாதனை பெண்களை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 19ஆம் திகதி புரவுன்லோ தோட்ட கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. கழகத் தலைவர் திருமதி பத்மா தலைமையின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கழக உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்தனர். இந்த மகளிர் கழகத்தினை மிக நீண்ட வருடங்களுக்குப் பிறகு வட்டார பிரதேச சபை உறுப்பினர் ராஜ் அசோக் பதிவு செய்து கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (மஸ்கெலியா நிருபர்)





கம்பளை வெலிகல்ல நகரில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக நேற்று வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பதையும் கேன்களை நீண்ட வரிசையில் அடுக்கியவாறு வைத்திருப்பதையும் படங்களில் காணலாம்.

(கம்பளை யோகா)

## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி



2021ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் பதுளை கல்வி வலயத்திற்குட்பட்ட தெல்பெத்த மலங்கமுவ ஸ்ரீவாணி தமிழ் வித்தியாலயத்திலிருந்து தோற்றியவர்களில் வை.லக்ஷினி (148) மேற்படி புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். பாடசாலை அதிபர் என்.சிவக்குமார், வகுப்பாசிரியை பி.சஹானா மற்றும் சித்தியடைந்த மாணவிக்கு பாடசாலை சமூகம் வாழ்த்துகளை தெரிவிக்கின்றது.

(நடராஜா மலர்வேந்தன்)




2021ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் மமா/ஹவ/மிட்லோதியன் தமிழ் வித்தியாலயத்திலிருந்து தோற்றியவர்களில் விஜயகுமார் சரோமி (165), கோவிந்தராஜ் கவிசியா (163), மகேஸ்வரன் சிரோஜீவன் (160), தேவபாலன் கவியரசி (155), சிவகுமார் துசான் (149), சத்தியநேசன் அனுஷ்கா (146) ஆகியோர் மேற்படி புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

பாடசாலை அதிபர் திருமதி எம்.நாகேந்திரன், வகுப்பாசிரியை திருமதி டி.சிவமலர் மற்றும் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்த மாணவர்களுக்கும் பாடசாலை சமூகம் பாராட்டுகளை தெரிவிக்கின்றது. (மஸ்கெலியா நிருபர்)



2021ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் ஹட்டன் வலயத்தின் கோட்டம் மூன்றில் உள்ள மஸ்கெலியா மமா/ஹவ/மவுசாக்கல தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்தவர்களில் சுந்தரராஜன் சதூர்ஷன் (169), கோபாலகிருஸ்ணன் ஜெனிபர் (156), சதாசிவம் யோகதர்ஷினி (150), சிவகுமார் சந்திரமோகன் (149), புஷ்பராஜ் பிரவின் (148) ஆகியோர் மேற்படி புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளனர். பாடசாலை அதிபர் டி. குமரேசன், ஆசிரியர்கள், வகுப்பாசிரியர்கள் மற்றும் சித்தியடைந்த மாணவர்களுக்கு பாடசாலை சமூகம் வாழ்த்துகளை தெரிவிக்கின்றது. (மஸ்கெலியா நிருபர்)




2021ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் ஹட்டன் வலயத்தின் கோட்டம் மூன்றிலுள்ள மஸ்கெலியா மமா/ஹவ/காட்மோர் தமிழ் வித்தியாலயத்திலிருந்து தோற்றியவர்களில் யூ.பிரியலோஷன் (174), டி.பவீஷ்ணன் (168), எஸ்.பிரணீஸ் எசான் (168), எஸ்.ஜானக (152), எஸ்.மனஷேக் (150), எஸ்.லக்சிகா (150), ஏ.மதுமிதன் (149), ஜே.சஸ்மித்தா (148) ஆகியோர் மேற்படி புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

பாடசாலை அதிபர் கே.மகேந்திரன், வகுப்பாசிரியர் திருமதி ஆர்.இந்திராணி, பிரதி அதிபர் ஆர்.பகீரதன் மற்றும் சித்தியடைந்த மாணவர்களுக்கு பாடசாலை சமூகம் வாழ்த்துகளை தெரிவிக்கின்றது. (மஸ்கெலியா நிருபர்)

# பேராதனைப் பூங்காவில் தாவரவியல் அருங்காட்சியகம் நிறுவ தீர்மானம்

## பணிப்பாளர் ஷேலோமி கிறிஷ்ணராஜா

**(கண்டி நிருபர்)**



பேராதனை தேசிய தாவரவியல் பூங்கா ஆரம்பிக்கப்பட்டு 200 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு, தாவரவியல் அருங்காட்சியகம் ஒன்று நிறுவுவதற்கு தேசிய தாவரவியல் திணைக்களம் திட்டமிட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் ஷேலோமி கிறிஷ்ணராஜா தெரிவித்தார்.

பேராதனை தாவரவியல் பூங்காவில் அமைந்துள்ள காரியாலயத்தில் கடந்த 19ஆம் திகதி நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பேராதனை தேசிய தாவரவியல் பூங்கா அமைக்கப்பட்டு 200 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு பல்வேறு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பேராதனைப் பூங்கா வளவில் அமைக்கப்படவுள்ள மேற்படி அருங்காட்சியகம் மூலம் இந்நாட்டின் தாவரங்கள் பற்றிய விஞ்ஞான ரீதியான தகவல்கள் மற்றும் சர்வதேச தாவரவியல் தொடர்பான தகவல்களையும் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார்.

ஆங்கிலேயரான அலெக்சாண்டர் மூன் என்பவரால் 1821ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இப்பூங்காவிற்கு தற்போது 200 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளன. மேற்படி பூங்கா பற்றிய முழு விபரம் அடங்கிய நூல் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது. ஞாபகார்த்த முத்திரை மற்றும் தபால் தலை என்பனவும் வெளியிடப்படவுள்ளன.

மகாவலி ஆற்றுக்கரையில் 147 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள இப்பூங்காவில் இலங்கைக்கு மட்டும் உரித்தான அனைத்து தாவரங்களும் நடப்பட்டுள்ள அதேவேளை, உலகின் அருமையான தாவரங்கள் சிலவும் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.





ஊவா ஐயப்ப சுவாமி ஒன்றியத்தினால், ஹாலி-எல பகுதியின் பெருந்தோட்டப் பிரிவு ஸ்ரீகணபதி அறநெறிப் பாடசாலையின் முதலாம் ஆண்டு பூர்த்தி விழா நேற்று (21) நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்களை காணலாம். (பதுளை நிருபர்)

# சமூக தொடர்பாடல் உத்தியோகத்தர்களின் சேவை மலையக மக்களுக்கு பயனடையும் வகையில் உள்ளது

## இ.தொ.கா. உப செயலாளர் ரூபன் பெருமாள்





பல வருட காலமாக மலையக மக்கள் அரச காரியாலயங்களில் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள பல சிரமங்களை எதிர்நோக்கி வந்த நிலையில், 2006ஆம் ஆண்டு பெருந்தோட்ட சமூக தொடர்பாடல் உத்தியோகத்தர்கள் பதவியேற்றதைத் தொடர்ந்து, தற்போது அரச அலுவலகங்களில் சேவைகளை இலகுவாக பெற்றுக்கொள்ளக்கூடியதான நிலைமை மாறியுள்ளதாக இ.தொ.காவின் உப செயலாளர் ரூபன் பெருமாள் தெரிவித்தார்.

மலையகத்தில் காணப்படும் அரச நிறுவனங்களில் சேவை புரியும் பெருந்தோட்ட சமூக தொடர்பாடல் வசதியளிப்பாளர் உத்தியோகத்தர்கள் தொழிற்சங்கத்தின் தேசிய மாநாடு நுவரெலியா நேச்சர் பெர்ஸ்ட் க்லப்பில் நேற்று முன்தினம் (20) நடைபெற்றது. இதன்போது புதிய நிர்வாகிகளும் தெரிவுசெய்யப்பட்டனர்.

தோட்ட வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் ஊடாக நடைபெற்ற மாநாட்டில் தொழிற்சங்கத்தின் புதிய தலைவராக ரூபன் பெருமாள் தெரிவுசெய்யப்பட்டார். இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அபிவிருத்தி செயற்றிட்டங்களை முன்னெடுக்கும் சந்தர்ப்பங்களில் பெருந்தோட்ட சமூக தொடர்பாடல் உத்தியோகத்தர்களின் சேவை மலையக மக்களுக்கு பயனடையும் வகையில் அமைவதாக தெரிவித்த அவர், தொழிற்சங்க உறுப்பினர்களின் நலனுக்காக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும், இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானுடன் கலந்துரையாடி, உறுப்பினர்கள் முகங்கொடுக்கும் சிரமங்களை தீர்த்துவைப்பதற்கு தன்னால் இயன்ற விடயங்களை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

குறித்த தொழிற்சங்க மாநாட்டின்போது செயலாளராக கே.எஸ்.எம். பர்ஷான், பொருளாளராக ஜீ.பாஸ்கரன் ஆகியோரும் மேலும் நிர்வாக சபை உறுப்பினர்களாக நுவரெலியா, பதுளை, கண்டி, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டின் கீழ் தலவாக்கலை, பத்தனை, கொட்டகலை ஆகிய பகுதிகளில் காணப்படும் ஆலயங்களுக்கு மின்பிறப்பாக்கி இயந்திரங்கள் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரனால் நேற்று முன்தினம் (20) வழங்கப்பட்டன.

(தலவாக்கலை நிருபர்)

# செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டாம்

## மஸ்கெலியா பொலிஸார் வர்த்தகர்களிடம் வேண்டுகோள்

**(மஸ்கெலியா நிருபர்)**

மஸ்கெலியா பகுதியிலுள்ள எரிபொருள் நிலையம் ஒன்றில் அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக பெருந்தொகையான எரிவாயு சிலிண்டர்கள் பதுக்கிவைத்திருந்ததை மஸ்கெலியா பொலிஸார் மீட்டுள்ளனர்.

மஸ்கெலியா பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலையடுத்து பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே இவ்வாறு 40இற்கும் மேற்பட்ட எரிவாயு சிலிண்டர்களை மீட்டு அதனை வரிசையில் காத்திருந்த பாவனையாளர்களுக்கு பகிர்ந்தளித்ததாக மேலும் தெரிவித்தனர்.

இது குறித்து மஸ்கெலியா பொலிஸ் நிலைய அதிகாரி ஒருவர் கூறுகையில், நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை நேரத்தில் வர்த்தகர்கள் செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டாம். கிடைக்கும் அனைத்து வர்த்தகப் பொருட்களையும் அனைவருக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும் என நகர வர்த்தகர்களுக்கு கோரிக்கை விடுத்தார்.

# "யாழின் மூன்று யுகங்களை நான் கண்டிருக்கிறேன்; அது எப்படி இருந்தது என்பது எனக்கு நினைவிருக்கிறது"

## யாழ். விசேட பொருளாதார மத்திய நிலையத்தை திறந்துவைத்து பிரதமர் மஹிந்த உரை

யாழ்ப்பாணம், மட்டுவிலில் நிர்மாணிக்கப்பட்ட யாழ்ப்பாணம் விசேட பொருளாதார மத்திய நிலையம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் நேற்று முன்தினம் (20) திறந்துவைக்கப்பட்டது.

இதற்காக அரசாங்கம் 200 மில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்ட யாழ். விசேட பொருளாதார மத்திய நிலையத்தை திறந்துவைத்து நினைவுப் பலகையை திரைநீக்கம் செய்து வைத்தார்.

இதன்போது பிரதமர் ஆற்றிய உரை வருமாறு;

யாழ்ப்பாணத்தின் மூன்று யுகங்களை நான் கண்டிருக்கிறேன். 1970களில் யாழ்ப்பாணம் எப்படி இருந்தது என்பது எனக்கு நினைவிருக்கிறது. அப்போது யாழ். மக்களுக்கும் கொழும்பு மக்களுக்கும் இடையே சிறந்த தொடர்பு இருந்தது. யாழ்ப்பாணத்தில் சிங்கள முதலாளிமார் இருந்தார்கள். இங்கிருந்த பெரும்பாலான தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அப்போது கொழும்பில் இருந்தனர். இன்றும் அப்படித்தான். யாழ்ப்பாணத்திலிருந்து ரயிலில் கொழும்பு வந்துசென்றனர்.

கொழும்பில் பணிபுரியும் அரச ஊழியர்கள் வெள்ளிக்கிழமை மாலை ரயிலில் ஏறி காலையில் யாழ்ப்பாணத்தை சென்றடைவர்.

அந்த சகாப்தம் 1980இற்குப் பின்னர் திடீரென மறைந்தது. யாழ்ப்பாணம் செல்லும் ரயில் பாதையை உடைத்தனர். தெற்கிலிருந்து வடக்கு நோக்கியும் வடக்கிலிருந்து தெற்கு நோக்கியும் செல்லவேண்டிய யாழ் தேவி நின்றது. வடக்கையும் தெற்கையும் இணைக்கும் பண்பாட்டுப் பாலமாக யாழ் தேவியைப் பார்க்கிறேன்.

வடக்கு மக்கள் சுதந்திரத்தை இழக்க ஆரம்பித்தனர். வடக்கில் விவசாயி நெல் வயலுக்குச் செல்ல முடியவில்லை. மீனவர்கள் கடலுக்கு செல்ல முடியவில்லை. வடக்கு பதுங்கு குழியாக மாறியது. சொந்த மண்ணில் சுதந்திரமாக வாழும் உரிமையை இழந்தனர். எந்த நேரத்திலும் தமது சொந்த வீடுகளைவிட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலை உருவானது.

வடக்கிலுள்ள மக்கள் அகதிகளாக பல்வேறு இடங்களுக்கு செல்லவேண்டியிருந்தது. ஆரம்ப காலத்தில் இந்தியாவிற்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்றனர். அவர்களுக்கு தாயகம் இருந்தாலும் அங்கு சுதந்திரமாக வாழமுடியாமல், தெரியாத பிரதேசங்களிலும், நாடுகளிலும் அகதிகளாக வாழவேண்டியதாயிற்று.

30 ஆண்டுகளாக அந்த இருண்ட சகாப்தம்



இருந்தது. அந்த இருண்ட காலத்தில் வடக்கு மக்களின் வாழ்வுரிமையும் அபிவிருத்தியும் பறிக்கப்பட்டன. மே 19, 2019 அன்று அந்த இருண்ட சகாப்தத்தை முடிவுக்குக் கொண்டுவர முடிந்தது. அதன் பின்னர் வடக்கு மக்கள் இழந்த உயிர்களை தவிர அனைத்தையும் வழங்க நடவடிக்கை எடுத்தோம்.

யுத்தம் முடிவடையும்போது இன்று வடக்கில் உள்ள எதையும் அன்று காணமுடியவில்லை. சுட்டு வீழ்த்தப்பட்ட கட்டிடங்கள், உடைந்த சாலைகள், வீடற்ற மக்கள். ஆனால், ஓரிரு வருடங்களில் அனைத்தையும் திருப்பிக் கொடுத்தோம். சாலைகள் அமைக்கப்பட்டன, தண்ணீர் வழங்கப்பட்டது, நூறாயிரக்கணக்கான கண்ணிவெடிகள் அகற்றப்பட்டன. மின்னல் வேகத்தில் மின்சாரம் கொடுக்கப்பட்டது என்று சொல்வதே சரியாக இருக்கும். பாடசாலைகள், மருத்துவமனைகள், இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் கட்டப்பட்டன. பல ஆண்டுகள் கழித்து ரயில் பாதை அமைக்கப்பட்டது.

வடக்கும் தெற்கும் யாழ் தேவியால் இணைக்கப்பட்டன. வடக்கில் மாகாண சபை மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டது. ஆனால் அந்த சகாப்தத்திற்கு 2015இல் இடையூறு ஏற்பட்டது. 2015இன் பின்னர் நாங்கள் செய்த வேலைகள் இடைநிறுத்தப்பட்டன. நல்லிணக்கம் என்ற திட்டம் வந்தது.

அவசரகாலச் சட்டங்களை நீக்கி நாம் ஏற்படுத்திய மாகாண சபை நல்லாட்சியுடன் கலைக்கப்பட்டது. நல்லாட்சி காலத்தில் ஒரு வீதி அபிவிருத்தியோ அல்லது மின்சார திட்டமோ யாழ்ப்பாணத்திற்கு கிடைக்கவில்லை. நாட்டிற்கும் கிடைக்கவில்லை.

புதிய மின்னுற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டிருந்தால் யாழ்ப்பாண மக்கள் இன்று இருளில் மூழ்கியிருக்க மாட்டார்கள். ஆனால் அந்த நல்லிணக்கத் திட்டத்திற்காக பில்லியன்கள் செலவிடப்பட்டன. சமாதானம் பற்றிய பாடலுக்கு பில்லியன்கள் செலவழிக்கப்பட்டன. யாழ்ப்பாண மக்களுக்கு ஒரு குடிநீர் குழாய் வழங்கப்படவில்லை.

நாங்கள் செய்துகொண்டிருந்த பணி 2015இல் நிறுத்தப்பட்டது. நாம் அதை மீண்டும் தொடங்க வேண்டும். 2019ஆம் ஆண்டு மீண்டும் இந்த நாட்டைக் கைப்பற்றியபோது, நல்லாட்சியின் மூலம் பின்னோக்கிச் சென்ற நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப திட்டமிட்டோம்.

ஆனால் திடீரென்று கொவிட் தொற்று ஏற்பட்டது. அந்த நேரத்தில் பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில் நாங்கள் எமது மக்களைப் பாதுகாக்கவே விரும்பினோம். நாம் அதை செய்தோம்.

நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன, மாகாண பிரதம செயலாளர் சமன் தர்ஷன படிகோரள, யாழ். மாவட்ட செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன், சாவகச்சேரி பிரதேச செயலாளர் என்.உஷா மற்றும் பிரதேச மக்கள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

## காங்கேசன்துறையில் இடம்பெற்ற 158ஆவது பொலிஸ் வீரர் தின நிகழ்வு



(யாழ். நிருபர்)

யாழ். காங்கேசன்துறையில் அமைந்துள்ள வடமாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபரின் அலுவலகம், யாழ். பிரதான பொலிஸ் நிலையம் உள்ளிட்ட 09 பிரதேச பொலிஸ் நிலையங்களிலும் 158ஆவது பொலிஸ் வீரர் தின நிகழ்வு நேற்று சுகாதார நடைமுறைகளை பின்பற்றி மட்டுப்படுத்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது.

இந்த பொலிஸ் வீரர் தினத்தினை முன்னிட்டு யாழ். பிரதான பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் காலை 07.50 மணிக்கு பொலிஸ் சின்னகொடி ஏற்றிவைக்கப்பட்டதை தொடர்ந்து கடந்த காலங்களில் பொலிஸாரின் பணியின்போது உயிர்களை தியாகம் செய்த பொலிஸ் வீரர்களுக்கான நினைவேந்தல் மலர்வளையம் வைத்து நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் என்.பி.விஜித் லியனகே மற்றும் யாழ். பொலிஸ் நிலைய பிரதான பரிசோதகர் ஆ.சமிந்த பலிகேன உள்ளிட்ட பொலிஸ் பதவி நிலைய அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், உயிர்நீத்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் பெற்றோர்கள் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

வடக்கு செய்திகள்

thamilannorth@gmail.com

## மூளாயில் விபத்து; காரைநகர் வாசி உயிரிழப்பு!



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் மூளாய்ப் பகுதியில் நேற்று முன்தினம் (20) இரவு இடம்பெற்ற விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மற்றொருவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் நியூ கமால் மாபிள் விற்பனை நிலையத்தில் கணக்காளராக பணியாற்றும் காரைநகர் கருங்காலியைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை நித்தியானந்தராசா (வயது 49) என்பவரே உயிரிழந்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக மாணவனான மூளாயைச் சேர்ந்த ஆனந்தகுமார் கஜீபன் என்ற இளைஞரே காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மூளாய் - மாவடி வீதியில், காளி கோயிலுக்கு சமீபமாக இருவரும் பயணித்த மோட்டார்சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## வவுனியா கோவில்குளம் கமநல சேவை நிலையத்தில் புத்தரிசி வழங்குவதற்கான விழா



(வவுனியா நிருபர்)

55ஆவது தேசிய புத்தரிசி விழாவிற்கான அரிசியினை வழங்குவதற்காக கமநல சேவை நிலையங்களில் இடம்பெறும் புத்தரிசி விழா நேற்றுக் காலை வவுனியா கோவில்குளம் கமநல சேவை நிலையத்தில் இடம்பெற்றது.

அறுவடை செய்யப்பட்ட நெல்லின் முதற் பகுதியை புத்தபெருமானுக்கு காணிக்கையாக செலுத்தும் வருடாந்த புத்தரிசி விழா ஏப்ரல் 03ஆம் திகதி அக்ர சாஸ்ய ஜெயஸ்ரீ மகா போதியில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்காக மாவட்ட ரீதியாக புத்தரிசி வழங்குவதற்கான விழா முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாவட்ட செயலாளர் சரத்சந்திர மற்றும் விவசாயத் திணைக்கள உயர் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், கமக்கார அமைப்பின் முக்கியஸ்தர்கள், விவசாயிகள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது நான்கு மதகுருமார்களினால் புத்தரிசி வழங்கும் செயற்பாடு ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் முருங்கனில் இலவச சித்த மருத்துவ முகாம்



(மன்னார் நகர் நிருபர்)

யாழ். இந்திய துணைத் தூதரகமும், வட மாகாண சுதேச மருத்துவ திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்த இலவச சித்த மருத்துவ முகாம் நேற்று முன்தினம் (20) காலைமுதல் மாலைவரை நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள முருங்கன் டொன் பொஸ்கோ ரெக் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல், இலங்கைக்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜன், வட மாகாண சுதேச மருத்துவ ஆணையாளர் வைத்தியர் திருமதி ஜெபநாம கணேசன், டொன் பொஸ்கோ இயக்குனர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குறித்த இலவச சித்த மருத்துவ முகாமின்போது சுமார் 175 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எழுவைதீவு தோமையார் முன்பள்ளிக்கு மேலைத்தேய வாத்தியக் கருவிகள் வழங்கிவைப்பு



(யாழ். நிருபர்)

தேனி சஞ்சிகை மற்றும் தேனி இணையதளத்தின் ஆசிரியர் அமரர் கணேஷ் கெங்காதரனின் (ஜெமினி) முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் எழுவைதீவு தோமையார் முன்பள்ளிக்கு மேலைத்தேய வாத்தியக் கருவிகள் வழங்கப்பட்டன.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி) ஜேர்மன் கிளையின் சுமார் 60,000 ரூபா நிதிப் பங்களிப்பில் குறித்த உதவித்திட்டம் வழங்கப்பட்டது.

கழகத்தின் எழுவைதீவு செயற்பாட்டாளர் ஆசிரியர் அன்ரன் றகீன்றாஜ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் கழகத்தின் லண்டன் கிளைத் தலைவர் எஸ்.பாலசுப்பிரமணியம் (பாலா), சாவகச்சேரி நகராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர் ஞா.கிஷோர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது எழுவைதீவு பிரிமியர் லீக் நிர்வாக உறுப்பினர்களுடன் லீக் போட்டிகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.



## தேன்ஒளி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு நிகழ்வுகள்



(சாவகச்சேரி நிருபர்)

கைதடி நுணாவில் தேன்ஒளி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமை கதிரொளி சனசமூக நிலைய முன்றலில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவகர் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி கலந்து சிறப்பித்திருந்தார்.

சிறப்பு விருந்தினராக கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை அதிபர் தங்கவேலு, கௌரவ விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் மதன்ராஜ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். சிறார்களுக்கான விளையாட்டு நிகழ்வுகள், பரிசளிப்பு வைபவம் ஆகியன இடம்பெற்றன.


திகதி 20.03.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4712
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 10,647,940.00
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 3 8 0 5 7 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,922,617.00

Mega POWER கோடி 23+ மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1060
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,986,780.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 242,954,506.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து B சுப்பர் இலக்கம் 01 வெற்றி இலக்கங்கள் 48 72 75 76

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 742
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,093,120.00
ஆங்கில எழுத்து U வெற்றி இலக்கங்கள் 37 49 75 77
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 103,426,999.20

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1226
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,117,360.00
வெற்றி இலக்கினம் மகரம் வெற்றி இலக்கங்கள் 7 0 1 3 9 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,718,858.80

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324 பெக்ஸ்: 0114 669 416

# தேசிய இளைஞர் சேவை மன்ற கிழக்கு அலுவலகம் அம்பாறைக்கு இடமாற்றம்

## மாவட்ட எம்.பிக்களின் அனுமதியுடன் தீர்மானிக்கப்பட்டதாக இம்ரான் எம்.பி. தெரிவிப்பு



(கிண்ணியா நிருபர்)

சாய்ந்தமருதில் இயங்கிவந்த இளைஞர் சேவை மன்ற கிழக்கு மாகாண அலுவலகம் அம்பாறைக்கு இடமாற்றப்பட்டுள்ளது. இந்த இடமாற்றம் அம்பாறை மாவட்டத்தின் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய அனுமதியுடன் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது - என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் கிழக்கு மாகாண அலுவலகம் அம்பாறை கச்சேரிக்கு இடமாற்றப்பட்டுள்ளதால் சகல அரச ரீதியான தொடர்புகளுக்கும் இந்த புதிய முகவரியோடு தொடர்புகொள்ளுமாறு சகல பணிப்பாளர்கள், மாகாணப் பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர்களுக்கும் தேசிய இளைஞர் சேவை மன்ற பணிப்பாளர் நாயகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பாளர்கள் இந்த விடயத்தை எனது கவனத்திற்கு கொண்டுவந்திருக்கின்றார்கள்.

இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் அமைச்சின் கீழ் இளைஞர் சேவை மன்றம் உள்ளது. இதுவரை சாய்ந்தமருதுவில் இயங்கி வந்த கிழக்கு மாகாண இளைஞர் சேவை மன்ற அலுவலகத்தை அம்பாறை மாவட்டத்திற்கு இடமாற்றுவதன் காரணம் என்ன? எனக் கேட்க விரும்புகின்றேன்.

மாவட்டத்தின் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களதும் ஒப்புதலுடன்தான் இந்த அலுவலக இடமாற்றம் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது. அரசுக்கு ஆதரவளித்துக் கொண்டிருக்கும் அம்பாறை மாவட்டத்தின் நான்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதுவரை இந்த அலுவலக இடமாற்றம் குறித்து எதுவும் கருத்து தெரிவிக்கவில்லை. எனவே, அம்பாறை மாவட்டத்தின் சகல எம்.பிக்களின் ஒத்துழைப்புடன் இடமாற்றம் இடம்பெற்றது என்று கூறப்படுவது உண்மை என்று நம்பக்கூடியதாக உள்ளது.

இருக்கின்ற வளத்தைப் பாதுகாக்க முடியாது வேறு பிரதேசங்களுக்கு அனுப்பும் 20இற்கு ஆதரவளித்தோர்களால் முஸ்லிம் சமூகம் வேறு என்ன நன்மைகளைப் பெறப்போகின்றது என்பதை அனைவரும் சிந்திக்க வேண்டும். பொதுமக்கள் குறிப்பிடுவதைபோல் இவர்கள் கேட்டவை அனைத்தும் அரசினால் ஏற்கனவே இவர்களுக்கு வழங்கப்பட்டு விட்டதால் புதிதாக எதனையும் கேட்க முடியாத நிலைக்கு இவர்கள் தள்ளப்பட்டிருக்கிறன்றார்கள் என்பதை உணர முடிகின்றது.

இந்த அரசு எப்படி இனவாதக் கருத்துகளை முன்வைத்து மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்ததோ அதேபோல் இவர்களும் தேர்தல் மேடைகளில் முஸ்லிம் மக்களின் உரிமைக் கோஷங்களை முன்வைத்து முஸ்லிம் மக்களை ஏமாற்றி அதிகாரத்திற்கு வந்தார்கள். ஆனால், இப்போது நடப்பது என்ன என்பதை அனைவரும் சிந்திக்கவேண்டிள்ளது.

இருக்கின்ற இந்த அலுவலகத்தையே பாதுகாக்க முடியாத இவர்கள் வேறு என்ன உரிமையைப் பெற்றுத்தரப் போகின்றார்கள் என்பது குறித்து அம்பாறை மாவட்ட முஸ்லிம் மக்கள் கவனம் செலுத்தவேண்டும் என இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# வாகரையில் இறால் வளர்ப்புப்பண்ணை அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கவனயீர்ப்புப் போராட்டம்





(வாழைச்சேனை நிருபர்)

மட்டக்களப்பு வாகரை பிரதேசத்தில் இறால் வளர்ப்புப்பண்ணை அமைக்கும் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அதனை தடுத்து நிறுத்தித்தருமாறு கோரி பிரதேச மக்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் நேற்றுக் காலை (21) ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை வாகரை பிரதேச செயலகத்திற்கு முன்பு ஒன்றுகூடியவர்கள் கையில் வாசகங்கள் எழுதிய பதாகைகளை கையில் ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, பிரதேச செயலகத்தின் வாயில் கதவினை பூட்டியும் செயலக உத்தியோகத்தர்கள் உள்ளே செல்லாதவாறும் தடுத்து தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினார்கள். பின்னர் பொலிஸாரின் தலையீடு மற்றும் பிரதேச செயலாளருடன் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கதவினை திறந்துவிட்டனர். இதன்போது அவ்விடத்தில் அமைதியின்மை ஏற்பட்டது.

மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன் இத்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாகவுள்ளதாகவும் அவர் இந்தத் திட்டத்தினை கைவிடவேண்டுமென தெரிவித்தனர்.

தனியார் கம்பனி ஒன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக கூறுகின்றனர். இதன்போது பிரதேச செயலாளர் சம்பவ இடத்திற்கு வருகை தந்து கலந்துரையாடலை மேற்கொண்டார். தெரிவிக்கப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் பேச்சுவார்த்தை பயனற்றுப்போனதால் பிரதேச செயலக நிர்வாகம் அவ்விடத்தினை விட்டு விலகிச் சென்றது.

இரண்டாம் கட்டமாக மீண்டும் பேச்சு மேற்கொள்ளப்பட்டதென போராட்டத்தில ஈடுபட்டவர்களில் 10 பேர் கொண்ட நபர்கள் வரவழைக்கப்பட்டு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது. கலந்துரையாடல் நிகழ்வில் இத்திட்டத்திற்கான பல்வேறு குறைபாடுகள் முன்வைக்கப்பட்டு திட்டத்தினை அமுல்படுத்தாதவாறு தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை விடுத்தனர்.

குறித்த திட்டம் ஆரம்பிப்பது தொடர்பாக 2017 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது என்றும் 1100 ஹெக்ரேயர் அளவு நிலப்பரப்பில் 150 ஹெக்ரேயர் அளவு நிலம் நண்டு வளர்ப்பிற்கு மாங்கேணி பகுதியில் ஒதுக்கபட்டுள்ளது. ஏனைய 950 ஹெக்ரேயரில் இறால் வளர்ப்பிற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக குறித்த வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக இதன்போது தெரிவிக்கப்பட்டது.

மேலும் இத்திட்டத்திற்கு மக்களின் எதிர்ப்பு தெரிவிக்கப்ப டுவதால் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு இது தொடர்பாக அறிக்கை சமர்ப்பிப்பதாகவும். தற்போது மேற்கொள்ளும் நில அளவை விடயத்தை இடைநிறுத்தி தருவதாகவும் கலந்துரையாடலின்போது பிரதேச செயலக நிர்வாகத்தினரால் தெரிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இத்திட்டத்தினை மேற்கொள்ளும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அறிக்கை சமர்பிக்கவுள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர். குறித்த விடயம் தொடர்பாக போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடப்பட்டு போராட்டம் முடிவிற்கு கொண்டுவரப்பட்டது. காலை 6.30 மணிக்கு ஆரம்பமான போராட்டமானது மதியம் 12 மணிவரை நீடித்தது. இதனால் பிரதேச செயலக நிர்வாக நடவடிக்கை களில் சுமார் 4 மணிநேரம் பாதிப்பு ஏற்பட்டது.

வாகரை தட்டுமுனை தொடக்கம் கட்டுமுறிவு வரையான சுமார் 950 ஹெக்ரேயர் அளவு கொண்ட ஆற்று களப்பு பிரதேசங்களில் இறால் பண்ணை அமைக்கும் நடவடிக்கைக்கு காணி தெரிவுசெய்யப்பட்டு நில அளவையாளர்களைக் கொண்டு காணி அளவீடு செய்யப்பட்டு வருவதாகவும் இவ்விடயம் தொடர்பாக பிரதேச மட்ட சமூக அமைப்புகள் மற்றும் மீனவர் சங்க அமைப்புகளுடன் எதுவிதமான கலந்துரையாடல்களை மேற்கொள்ள வில்லையென போராட்டத்தில் ஈடுபட்டோர் கவலை தெரிவித்தனர்.

இந்நடவடிக்கையினை தொடர்ந்தால் ஆற்றுப் பகுதியினை அண்மித்த பகுதியில் இயற்கை சமநிலையில் குழப்பம் ஏற்படுவதுடன், களப்பு மீன்பிடி, சேனைப் பயிர்ச்செய்கை, காடழிப்பு, பறவைகள், விலங்குகளுக்கு சரணாலயம் இல்லாமல் போதல், வாழ்வாதாரம் பாதிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

# காத்தான்குடியில் கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையம் உடைத்துக் கொள்ளை

## 7 பேர் கைது, 43 கைபேசிகள் மீட்பு

(கனகராசா சரவணன்)

காத்தான்குடி பிரதேசத்தில் கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்றினை உடைத்து, 24 இலட்சம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசிகளை கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் (20) ஒருவரை கைதுசெய்ததையடுத்து, இதுவரை 7 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், 43 கையடக்கத் தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்தில் பிரதான வீதியில் உள்ள கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையம் கடந்த முதலாம் திகதி இரவு கதவு உடைத்து அங்கிருந்த 24 இலட்சம் ரூபா பெறுமதியான 75 கையடக்கத் தொலைபேசிகள் கொள்ளையிடப்பட்டன.

இது தொடர்பாக காத்தான்குடி பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி வை.விஜயராஜா தலைமையிலான குழு மேற்கொண்ட விசாரணையில் அம்பாறை



இறக்காமம் பிரதேசத்தில் பெண் ஒருவர் உட்பட 3 பேரும் அக்கரைப்பற்றில் ஒருவருமாக 4 பேர் கடந்த 13ஆம் திகதி 23 கையடக்கத் தொலைபேசிகளுடன் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்தக் கொள்ளையின் பிரதான சூத்திரதாரி தலைமறைவாகிய நிலையில் 19ஆம் திகதி 21 வயதுடைய இறக்காமம் பிரதேசத்தைச் சேர்ந்த பிரதான சூத்திரதாரியுடன் போரதீவைச் சேர்ந்த ஒருவர் உட்பட இருவர் கைதுசெய்யப்பட்டு 13 கையடக்கத் தொலைபேசிகள் மீட்கப்பட்டதுடன், இவர்களையும் நீதிமன்றில் ஆஜர்படுத்தி விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்த கொள்ளையர்களிடம் மேற்கொண்ட விசாரணையில் அவர்கள் வழங்கிய தகவலுக்கமைய மட்டக்களப்பு சல்லிப்பிட்டி புகியில் இந்த கொள்ளை குழுவைச் சேர்ந்த ஒருவரை நேற்று ஞாயிற்றுக்கிழமை ஒரு கையடக்கத் தொலைபேசியுடன் கைது செய்ததையடுத்து, இந்தக் கொள்ளையுடன் தொடர்புடைய ஒரு பெண் உட்பட 7 பேரை இதுவரை கைதுசெய்துள்ளதுடன், 43 கையடக்கத் தொலைபேசிகளை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நாவற்கேணியில் இரு குழுக்களுக்கிடையே வாள்வெட்டு

## இருவர் படுகாயம்; 2 பேர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு தலைமை பொலிஸ் பிரிவிலுள்ள நாவற்கேணி சந்தியில் இரு குழுக்களுக்கிடையே நேற்று முன்தினம் (20) ஏற்பட்ட குழு மோதலில் இருவர் வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதுடன், இருவரை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற மரணவீடொன்றில் கலந்துகொண்டவர்கள், அங்கு கடதாசி விளையாட்டில் ஏற்பட்ட பிரச்சினையின் எதிரொலியாக நேற்று முன்தினம் பகல் ஒரு மணியளவில் அவர்களுக்கிடையே நாவற்கேணி சந்தியில் மோதல் ஏற்பட்டது.

இந்தக் குழு மோதலில் இருவர் வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் மட்டு. போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவரை கத்திகளுடன் கைதுசெய்துள்ளதாகவும் இதனுடன் தொடர்புபட்டவர்கள் தலைமறைவாகியுள்ளதுடன், அவர்களை கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# காலந்தாழ்த்தாது உரிய நியமனங்களை வழங்கக்கோரி திருமலையில் தொண்டர் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்





(திருமலை நிருபர்)

காலந்தாழ்த்தாமல் உரிய நியமனங்களை வழங்குமாறு கோரி தொண்டர் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு முன்பாக நேற்று (21) 12.00 மணியளவில் திருகோணமலை மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் சங்கத்தின் சார்பாக குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. குறித்த ஆர்ப்பாட்டத்தில் கடந்த 25 வருடங்களுக்கும் மேலாக கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்த தொண்டர் ஆசிரியர்களின் நியமனங்களை வழங்குமாறு வலியுறுத்தி குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் கடந்த நல்லாட்சி காலத்தில் அரசியல் ரீதியாக பழிவாங்கப்பட்ட எமக்கு நீதி வேண்டும், நிரந்தர ஆசிரியர் நியமனம் வேண்டும், கௌரவ ஆளுநர் அவர்களே அநீதி இழைக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது எப்போது, 2018ஆம் ஆண்டுக்குப் பின்னர் கல்வி கற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்குவதை விட நீண்டகால தொண்டர் ஆசிரியர்களான எமக்கு ஒரு தீர்வை தாருங்கள், கிழக்கு மாகாண பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை எமது நீண்டகால தொண்டர் ஆசிரியர்களின் சேவையினை கொண்டு தீர்க்க முடியும் மற்றும் வேண்டும் வேண்டும் நிரந்தர நியமனம் வேண்டும் என்ற பதாகைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்

மேலும் குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த தொண்டர் ஆசிரியர்களில் ஒருவர் நாட்டில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவிவந்த காலகட்டத்தில் பாடசாலைகளின் ஊடாக குறித்த ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திசெய்யும் வகையில் தொண்டர் ஆசிரியர்கள் ஆகிய நாங்கள் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்து இருந்தோம் ஆனால் நிரந்தர வேலைவாய்ப்பு என்று வரும்போது அரசியல் இலாபத்திற்காக சுயநலமாக கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடாத பல ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள விடயமானது கவலைக்குரியது எனவும் இதன்போது தெரிவித்தார்.

மேலும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்த தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தர நியமனத்தின் போது பாதிக்கப்பட்டவர்கள் எனவும் அவ்வாறு அவர்களுக்கு நியமனம் வழங்குவதை விட்டுவிட்டு மாறாக பல்வேறு மாற்று செயற்பாடுகள் முன்னெடுத்து வருவதாகவும் இன்னமும் காலந்தாழ்த்தாமல் தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனத்தை வழங்குமாறும் ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் வேண்டுகோள் விடுத்ததுடன் குறித்த தொண்டர் ஆசிரியர்களினால் கையொப்பங்கள் அடங்கிய மகஜர் ஒன்றும் கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் கையளிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# சம்மாந்துறையில் எரிவாயுவை பெற நீண்ட வரிசையில் காத்திருந்த பொதுமக்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்





**(சம்மாந்துறை நிருபர்)**

சம்மாந்துறை பிரதேசத்தில் சமையல் எரிவாயுவைப் பெற்றுக்கொள்வதற்கு இன்று காலை 08 மணிமுதல் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்துக்கொண்டிருந்தார்கள்.

சமையல் எரிவாயு சம்மாந்துறை பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் வழங்கப்பட விருப்பதாக கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையிலேயே பொதுமக்கள் அங்கு பி.ப. 2.00 மணிவரை காத்திருந்தனர்.

ஆயினும், சமையல் எரிவாயு இன்றைய நாளில் வழங்கப்படமாட்டாது என்று சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.டி.எச். ஜெயலத் மக்களிடம் தெரிவித்தமையை தொடர்ந்து அங்கிருந்து பொதுமக்கள் ஏமாற்றத்துடன், வீடு திரும்பினர்.

இன்று சமையல் எரிவாயு வழங்கப்பட இருப்பதாக கிடைக்கப்பெற்ற தகவல்களையடுத்து பொதுமக்கள் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையால் செல்லும் வீதி ஓரத்தில் சிலிண்டர்களை வரிசையாக அடுக்கிவைத்து 2.00 மணிவரையும் காத்துக்கொண்டிருந்தார்கள்.

சமையல் எரிவாயு வழங்கப்படுவதற்குரிய ஏற்பாட்டை சம்மாந்துறை வர்த்தக சம்மேளனத்தினர் செய்ததாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில், நீண்ட வரிசையில் சுமார் 5 மணித்தியாலத்திற்கும் அதிகமாக காத்திருந்த பொதுமக்களின் பரிதாப நிலையை கருத்திற்கொண்டு சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமையல் எரிவாயு வழங்கும் முகவருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, சம்மாந்துறை மக்களுக்கு வழங்குவதற்கு கொண்டுவரப்பட்ட சமையல் எரிவாயுவை வேறு ஓர் இடத்தில் தற்செயலாக வழங்கவேண்டி ஏற்பட்டதாகவும், சம்மாந்துறை மக்களுக்கு பிறிதொரு தினத்தில் வழங்குவதற்கு ஏற்பாடுசெய்ய இருப்பதாகவும் குறித்த முகவர் தெரிவித்ததாக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொதுமக்களிடம் நேரடியாக வந்து தெரிவித்தார்.

சமையல் எரிவாயுவை பெற்றுக்கொள்வதற்கு சிறுவர்கள், பெரியவர்கள், முதியோர்கள், ஆண்கள், பெண்கள் என பலரும் திரண்டிருந்தனர்.

சமையல் எரிவாயுவை பெற்றுக்கொள்வதற்கு வருகை தந்த இரண்டு சிறுவர்கள் ஏமாற்றத்துடன் சிலிண்டரை தூக்க இயலாது ஆளுக்கொரு பக்கமாக நீண்டநேரம் தூக்கிக்கொண்டு சென்றதை எம்மால் காணக்கூடியதாக இருந்தது.

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி



**(மீராவோடை நிருபர்)**

வெளியான புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேற்றின்படி செம்மண்ணோடை அல்-ஹம்றா வித்தியாலய மாணவி செய்னப் அபாப் 164 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

இவர், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை உத்தியோகத்தரும் சமூக செயற்பாட்டாளருமான ஆதம் லெப்பை யாசீன், ஓட்டமாவடி சரீப் அலி வித்தியாலய ஆசிரியை ஜெளபர் றிஸ்மியா தம்பதிகளின் புதல்வியாவார்.



**(மருதமுனை நிருபர்)**

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் மருதமுனை அல்-ஹிக்மா வித்தியாலய மாணவி சாஜஹான் பாத்திமா ஸஹ்னா 174 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் நடத்துனர் சாஜஹான், சிறுவர் உரிமை மேம்பாட்டு மாவட்ட இணைப்பாளர் சரிபா தம்பதியின் புதல்வியாவார்.



**(மாவடிப்பள்ளி நிருபர்)**

கல்முனை அல்பஹ்ரியா தேசிய பாடசாலையிலிருந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவ மாணவிகளை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. அதிபர் எம்.எஸ்.எம்.பைசால் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இம்மாணவர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவ சங்க உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.



**(மருதமுனை நிருபர்)**

2021ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேற்றில் மருதமுனை அல்ஹம்றா வித்தியாலயம் கல்முனை கல்வி வலயத்தில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளதாக பாடசாலை அதிபர் ஐ.உபைதுல்லாஹ் தெரிவித்தார்.

இப்பாடசாலையில் 52 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி 21 மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்திபெற்றுள்ளனர். ஏனைய எல்லா மாணர்களும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மாணவன் எம்.ஐ.ஏ.மிஸ்ரப் அபூபக்கர் 173 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலிடத்தில் உள்ளார்.

கல்முனை கல்வி வலயத்தில் மருதமுனை அல்ஹம்றா வித்தியாலயம் நூறு வீதம் சித்தி பெற்று வலயத்தில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளதை பாராட்டும் வகையில் கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எல்.அப்துல் றஹீம் ஆகியோர் பாடசாலைக்கு வருகைதந்து அதிபர் ஐ.உபைதுல்லாஹ்வை பாராட்டியதுடன், கற்பித்த ஆசிரியர்களான எம்.எல்.எம்.நௌஷாட், எம்.எச்.எஸ்.ரூபீனா ஆகியோரையும் பிரதி அதிபர்கள் மற்றும் உதவி அதிபர்களையும் பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு சீலாமுனையில் கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது



**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு தலைமை பொலிஸ் நிலையத்தின் கீழ் உள்ள சீலாமுனை பகுதியில் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்ட கஞ்சா வியாபாரி ஒருவரை நேற்று முன்தினம் (20) 200 கிராம் கேரள கஞ்சாவுடன் கைதுசெய்துள்ளதாக தெரிவித்தனர்.

மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து குறித்த பகுதியிலுள்ள வீட்டை சம்பவதினமான நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் பொலிஸார் முற்றுகையிட்டனர். இதன்போது கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்ட கஞ்சா வியாபாரியை 200 கிராம் கேரள கஞ்சாவுடன் கைதுசெய்தனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



**நாடு பஞ்சம் பட்டினி மக்கள் வீதிகளில. ஆனால் பிரதமர் மகிந்தவின் மகன் விளையாட்டு அமைச்சர் மாலதீவில நீச்சல் அடிக்கிறாராம்! அவருக்கு என்ன செல்லப்புள்ள எலுவா.. மக்கள் என்ன பாடுபட்டா என்ன தனக்கு ஒப்படைத்த பதவிய விளையாட்டாகவே காலத்த ஓட்டுறார்.. இந்த பேயனுகள் உள்ளவரை மக்கள்தான் பாவம் பாருங்க! இது மொட்டுக்கு வாக்களித்த மக்களுக்குத்தான் சமர்ப்பணம்!**

# கேஸுக்காக வெயிலில் வாடும் நுகர்வோர்கள்



**(மீராவோடை நிருபர்)**

நாட்டில் தட்டுப்பாடாகவுள்ள எரிவாயு சிலிண்டர்களை பெற்றுக்கொள்ள பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின் றனர்.

அந்தவகையில், வாழைச்சேனை பொலிஸ் நிலைய சந்தியில் லிட்ரோ சிலிண்டர்களைப் பெற்றுக்கொள்ள நேற்று முன்தினம் (20) அதிகாலைமுதல் மதியம்வரை நுகர்வோர்கள் கடும் வெயிலில் காத்துக் கிடந்ததை காணமுடிந்தது.

வாழைச்சேனை, ஓட்டமாவடி பகுதிகளில் கேஸ் சிலிண்டர்களை பெற்றுக்கொள்வதில் நுகர்வோர்கள் தொடர்ந்தும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்நிலையில், இன்று எரிவாயு சிலிண்டர்கள் வரும் என்ற எதிர்பார்புடன் சுமார் ஐந்நூருக்கும் மேற்பட்ட நுகர்வோர்கள் எதிர்பார்த்து காத்து நிற்கின்றனர்.





**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட உயர்பீட உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், பிரதித் தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் வேட்பாளர்களுக்கான மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் அட்டாளைச்சேனை மீனோடைக்கட்டு சக்கி வரவேற்பு மண்டபத்தில் நேற்று முன்தினம் (20) முஸ்லிம் காங்கிரஸ் தேசிய தலைவர் ரஊப் ஹக்கீம் தலைமையில் நடைபெற்றதை படத்தில் காணலாம் . (படங்கள் - ஒலுவில், திகாமடுல்ல நிருபர்கள்)**

# உலக சாதனை சுட்டி கிராண்ட் மாஸ்டர் அனா கிழக்கு மாகாண ஆளுநரால் பாராட்டி கௌரவிப்பு



**(நிந்தவூர் நிருபர்)**

நிந்தவூரைச் சேர்ந்த சாதனை சுட்டி றணீஸ் பாத்திமா அனா உலக சாதனை படைத்து சர்வதேச சாதனை புத்தகத்தில் தனது பெயரை பதித்தமைக்கு அண்மையில் அம்பாறை ஆளுநர் அலுவலகத்தில் வைத்து கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் பாராட்டி கௌரவித்தார்.

நிந்தவூர் அல்-மஸ்ஹர் பெண்கள் உயர்தர (தேசிய) பாடசாலையின் முதலாம் தரம் மாணவியான பாத்திமா அனா நிந்தவூர் மீரா நகரைச் சேர்ந்த றணீஸ் - இஷாதா தம்பதிகளின் புதல்வியும் ஆவார்.

இச்சாதனை சுட்டி ஆசிய சாதனை புத்தகத்தில் GRAND MASTER என்னும் மகுடம் சூடிய இலங்கையின் முதலாவது சிறுமியும், அமெரிக்க சாதனை புத்தகத்தில் (World Champion) உலக சாம்பியன் என்னும் பட்டத்தை பெற்றவரும், ஐரோப்பிய சாதனை புத்தகத்தில் பல நாட்டு சிறார்களின் சாதனையை முறியடித்து தன் பெயரை பதித்தவர் என்பதும் குறிப்பிடதக்கதுடன்,

இந்நிகழ்வின்போது அனா தனது சாதனைகளை ஆளுநருக்கும் ஆளுநர் அலுவலக அதிகாரிகளுக்கும் செய்து காட்டி அவர்களால் கேட்கப்பட்ட வினாக்களுக்கு மிக வேகமாக சரியான பதிலைக் கூறி அனைவரையும் வியப்பூட்டி அனைவரினதும் பாராட்டுகளையும், கௌரவத்தினையும் பெற்றுக்கொண்டார்.

# முஸ்லிம்களுக்கு இழைத்த கொடுமைக்காக மின்துண்டிப்பு வாயிலாக ஆட்சியாளர்களுக்கு இறை தண்டனை கிடைத்துள்ளது

## முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தெரிவிப்பு





**(பெரியநீலாவணை நிருபர்)**

கொரோனா தொற்றினால் மரணித்த முஸ்லிம்களின் உடல்களை அடக்கவிடாமல் பலாத்காரமாக எரித்ததன் சாபம் இன்று அவர்களின் இறுதிக் கடமையான உடல்களை எரிக்க முடியாமல் அடக்கம் செய்யும் நிலையை இறைவன் ஏற்படுத்தியுள்ளான் - என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டரங்கில் கடந்த சனிக்கிழமை (19) இடம்பெற்ற "ரிஷாட் பதியுதீன் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின்" பரிசளிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ரிஷாட் பதியுதீன் இவ்வாறு தெரிவித்தார்.

சஹ்ரான் என்ற கொடூரன் செய்த செயலுக்காக அப்பாவி முஸ்லிம் இளைஞர்களை சிறையிலடைத்தார்கள். ஆன்மீகத் தலைவர்கள், சட்டத்தரணி ஹிஜாஸ், டொக்டர் ஷாபி போன்ற கல்விமான்கள், நான் உட்பட அஸாத் சாலி போன்ற அரசியல்வாதிகளையும் முஸ்லிம் சமூகத்தை அடக்க வேண்டும் என்பதற்காக அநியாயமாக சிறையிலடைத்தார்கள்.

ஆனால் இவற்றை நன்கு தெரிந்தும், இந்த ஆட்சியாளர்களை பலப்படுத்த எமது வாக்குகளை பெற்ற முஸ்லிம் எம்.பிக்கள் 20 இற்கு கை உயர்த்திய பாவத்தை முஸ்லிம் சமூகம் மிக வேதனையோடு பார்த்துக் கொண்டிருக்கின்றது.

ஆட்சியாளர்கள் குறித்து மக்கள் மத்தியில் இருக்கும் அச்சம் நீக்கப்பட வேண்டும். அவர்கள் புரியும் அட்டூழியங்களை தட்டிக்கேட்க வேண்டும்.

இந்த ஆட்சியாளர்களை எதிர்ப்பது பெரும் ஆபத்தென்றும் இதற்காகத்தான் நாங்கள் கை உயர்த்தினோம் என்று யாராவது கூறுவார்களாக இருந்தால் அதனை யாரும் நம்ப வேண்டாம். நாம் பயந்த சமூகம் அல்ல. எமது வரலாற்றை சற்று பின்னோக்கிப் பாருங்கள்.

இன்று நிலைமை தலைகீழாக மாறி இருக்கிறது. ஆட்சியாளர்களுக்கு வாக்களித்த 69 இலட்சம் வாக்காளருக்கு மேற்பட்ட மக்கள் வீதிகளில் இறங்கி இருக்கின்றார்கள். நேற்று ஒரு கட்சி, நேற்று முன்தினம் ஒரு காட்சி நாளை ஒரு கட்சி என உலகத்தில் எந்த ஜனாதிபதிக்கும் நடக்காத விடயம் நமது நாட்டில் நடந்தேறிக்கொண்டிருக்கிறது.

ஜனாதிபதி செயலகத்திற்குள் நுழைந்து நீங்கள் வீட்டுக்குச் செல்லுங்கள் என்று மக்கள் தமது எதிர்ப்பை வெளிக்காட்ட ஆரம்பித்திருக்கிறார்கள்.

இளைஞர் சமூகத்தை குறிவைத்து அவர்களை அதள பாதாளத்திற்குத் தள்ளிவிடும் போதைவஸ்து பாவனை எமது சமூகத்தில் வேகமாக ஊடுருவி வருக்கிறது. எனவே, நமது இளைஞர்களை விளையாட்டுக் கழகங்கள் உடைய பிரதிநிதிகள் வழிநடத்த வேண்டும். அவர்களுக்கு விழிப்பூட்டல் செய்யவேண்டும். சமூகத்தில் பலம் வாய்ந்த சக்தியாக இளைஞர் சமூகம் மாற வேண்டும் என்பதை புரிந்துகொள்ளுங்கள் என்றும் தெரிவித்தார்.

# அனைத்து நாடாளுமன்ற ஒன்றியத்தின் 144ஆவது அமர்வு பாலியில் ஆரம்பம்

## கூட்டமைப்பின் சார்பில் பங்கேற்றார் சாணக்கியன்!





ஆனைத்து நாடாளுமன்ற ஒன்றியத்தின் 144ஆவது அமர்வானது இந்தோனேசியாவின் பாலியில் ஆரம்பமாகியுள்ளது.

குறித்த அமர்வானது நேற்று முன்தினம் (20) ஆரம்பமாகியுள்ள நிலையில், எதிர்வரும் 24ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இந்நிலையில், குறித்த அமர்வில் பங்கேற்கும் வகையில் இலங்கை நாடாளுமன்ற குழுவானது சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் அங்கு சென்றுள்ளது.

குறித்த குழுவில் அமைச்சர் டலஸ் அழகப்பெரும, நாடாளுமன்ற உறுப்பினர்களான காவிந்த ஜயவர்தன, ராஜிகா விக்ரமசிங்க மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தும்



வகையில் இரா.சாணக்கியன் ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.

இதன்போது இளைஞர்கள் தொடர்பான பல விடயங்களுடன் காலநிலை மாற்றம் மற்றும் உலகப் பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவுக்கும் சர்வதேச பொலிஸ் பிரதானி கலாநிதி அஹமட் நஷார் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு அண்மையில் டுபாயில் இடம்பெற்றது.

# பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் கண்டியில் ஜின்னா ஞாபகார்த்த நிலையத்திற்கு விஜயம்

**(இக்பால் அலி)**

இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் ஓய்வு நிலை மேஜர் ஜென்ரல் உமர் பாரூக் புக்கிரி கண்டி ஜின்னா ஞாபகார்த்த நிலையத்திற்கு விஜயம் மேற்கொண்டு கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கத்தினருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இலங்கையிலுள்ள மாணவர், மாணவிகளுக்கான அல்லாமா இக்பால் ஞாபகார்த்த புலமைப்பரிசில் திட்டம் ,க.பொ.த. சாதாரண தரம் சித்தியடைந்த மாணவர், மாணவிகளுக்கான ஜின்னா ஞாபகார்த்த நிதி உதவி வழங்குதல், கலாநிதி, முதுத்துவமாணி போன்ற துறைகளுக்கு இன, மத பேதமின்றி மாணவர்களை சேர்த்துக் கொள்தல், இரு நாடுகளுக்கிடையிலான தொடர்புகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில்




வலுவானதாக காணப்படுவதாக இதன்போது கலந்துரையாடப்பட்டது.

பாகிஸ்தான் வதிவிடப் பிரதிநிதி அப்சல் மரைக்கார், கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் பொதுச் செயலாளர் முஜிபுர் ரஹ்மான் உள்ளிட்ட வர்த்தக சங்க உயர்பீட குழுமத்தினர் கலந்து கொண்டனர்.

# துறைமுக பிரவேச வீதி நிர்மாணப்பணிகளை 2023ஆம் ஆண்டுக்குள் நிறைவுசெய்ய வேண்டும்

## அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மீளாய்வுக் கூட்டத்தில் அதிகாரிகளுக்கு ஆலோசனை

இங்குருகொட சந்தியிலிருந்து காலிமுகத் திடல் துறைமுக நகரம் வரையான கோபுரங்களின் மேல் நிர்மாணிக்கப்படும் துறைமுக பிரவேச வீதியை 2023ஆம் ஆண்டுக்குள் பூர்த்திசெய்து மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட வேண்டும் எனவும் அதற்கான நடவடிக்கைகளை விரைவாக முன்னெடுக்குமாறும் அதிகாரிகளுக்கு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அண்மையில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கோபுரங்களின் மேல் நிர்மாணிக்கப்படும் துறைமுக பிரவேச வீதி தொடர்பான நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கோபுரங்கள் மேல் நிர்மாணிக்கப்படும் துறைமுக பிரவேச வீதி பணிகள் முதல் இரண்டு ஆண்டுகளில் மெதுவாக இடம்பெற்றதால் அதன் நிர்மாண முன்னேற்றம் 7 சதவீதம் வரை குறைந்திருந்தது. எவ்வாறாயினும், 2022ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் முழுமையான நிர்மாண முன்னேற்றம் 32 சதவீதமாக இருக்கும் என்றும், இலங்கையில் முதன்முறையாகப் பயன்படுத்தப்படும் புதிய தொழில்நுட்பமான பாலத்தின் பாகங்களை இணைக்கும் பணிகள் தொடர்ந்து இடம்பெறுவதாகவும் திட்டப் பணிப்பாளர் கே.டபிள்யு.கண்டம்பி அமைச்சருக்குத் தெரிவித்தார்.

கொழும்பு வர்த்தக நகரின் நுழைவாயிலில் நிலவும் கடும் வாகன நெரிசலுக்கு நிரந்தர தீர்வாக இங்குருகொட சந்தியிலிருந்து புதிய துறைமுக நகரம் வரையிலான கோபுரங்களுக்கு மேல் புதிய அதிவேக நெடுஞ்சாலையை அமைக்க நெடுஞ்சாலைகள்



அமைச்சும் வீதி அபிவிருத்தி அதிகார சபையும் திட்டமிட்டுள்ளன. சுற்றுச்சூழலை பாதிக்காத வகையில் கோபுரங்கள் மீது அமைக்கப்பட்டுள்ளமை இந்த வீதியின் விசேடமாகும்.

கோபுரங்களின் மீது செல்லும் துறைமுக பிரவேச வீதியின் தூரம் 5.3 கிலோமீற்றர் களாகும். நான்குவழிப் பாதையாக நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இங்குருகடே சந்தியிலிருந்து ஆரம்பமாகி காலி முகத்திடல் துறைமுக நகரத்தில் முடிவடையும் இந்த வீதியின் நிர்மாணப்பணிகளுக்கு 28,002 மில்லியன் ரூபா செலவாகும்.

நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மேற்பார்வையின் கீழ் சீன சிவில் பொறியியல் கட்டுமானக் கூட்டுத்தாபனத்தினால் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதிவேக நெடுஞ்சாலையில் 5 நுழைவாயில்கள் இருக்கும். இங்குருகொடவுக்கான நுழைவாயில், புறக்கோட்டை விமலதர்ம நிறுவனத்திற்கு அருகிலுள்ள நுழைவாயில், அலுத்மாவத்தை நுழைவாயில், காலிமுகத்திடலுக்கான நுழைவாயில் மற்றும் துறைமுக நகரத்தின் நுழைவாயில் ஆகியவையாகும்.

இந்த அதிவேக நெடுஞ்சாலை துறைமுகத்திலிருந்து தடையின்றி கொள்கலன் போக்குவரத்துக்கான புதிய பிரவேச வீதியாகும். இங்குருகொடே சந்திக்கு அருகிலுள்ள நுழைவாயிலில், இந்த கோபுரங்களில் நிர்மாணிக்கப்படும் துறைமுக பிரவேச நெடுஞ்சாலையானது புதிய களனி பாலத்தின் மீதான வீதியுடன் இணைக்கப்படும்.

நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ஆர்.டபிள்யூ.ஆர்.பேமசிறி, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் சர்தா வீரகோன், துறைமுக பிரவேச அதிவேக நெடுஞ்சாலை திட்ட பணிப்பாளர் கே.டபிள்யூ. கண்டம்பி, சீன சிவில் பொறியியல் கட்டுமானக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகளும் இதில் கலந்துகொண்டார்கள்.

# மக்கள் வங்கியின் சியம்பலாண்டுவ கிளை மேம்படுத்தப்பட்டு திறந்துவைப்பு






வாடிக்கையாளர்களுக்கு எல்லையற்ற டிஜிட்டல் வங்கி அனுபவத்தினை பெற்றுக் கொடுத்திடும் நோக்கத்துடன் மக்கள் வங்கி தமது சியம்பலாண்டுவ சேவை நிலையத்தினை முற்றிலும் மேம்படுத்தப்பட்ட கிளையாக திறந்துவைத்தது. மேலும் இதனை நாட்டின் 364ஆவது மக்கள் வங்கிக் கிளையாக அண்மையில் பொதுமக்களின் சேவைக்காக வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளர் ரஞ்சித் கொடிதுவக்கு, பிரதி பொது முகாமையாளர் - செனல் முகாமைத்துவம் - மஹிந்த பிரேமநாத், மொனராகலை பிராந்திய முகாமையாளர் - சமன் ரத்னாயக்க, கேகாலை பிராந்திய முகாமையாளர் - ரொஹான் பெரேரா, உதவி பிராந்திய முகாமையாளர்கள் - எம்.எம்.ஏ. அமரசிறி மற்றும் ஆர்.எம்.பீ.ரத்நாயக்க உட்பட மக்கள் வங்கியிலிருந்து அனைவரும் சமன் வர்ணகுலசூரிய – சியம்பலாண்டுவ பிரதேச சபைத் தலைவர், அசங்க ரத்நாயக்க - சியம்பலாண்டுவ பிரதேச செயலாளர், சியம்பலாண்டுவ பொலிஸ் நிலைய OIC - ரவீந்ர ஹேரத், கிளை முகாமையாளர் - அச்சல ரத்நாயக்க ஆகியோருடன் ஏனைய வங்கி அதிகாரிகளும், வாடிக்கையாளர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இத்திறப்பு விழாவானது கொவிட் - 19 சுகாதார வழிகாட்டல்களுக்கமைய இடம்பெற்றதென்பதும் குறிப்பிடத்தக்கது.





உடப்பு, ஆண்டிமுனை பகுதிகளிலுள்ள பாலர் பாடசாலைகளின் ஏற்பாட்டில் "சிறுவர் சந்தை"நிகழ்வு அண்மையில் உடப்பு திறந்தவெளியில் இடம்பெற்றது. இதன்போது பெற்றோர்கள், மாணவர்களை ஊக்கப்படுத்தியதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

**(படங்கள் - உடப்பு நிருபர்)**

# குற்றம் தவிர்

Police Roundup

## கொலை செய்து நகைகளை திருடிய சம்பவம்

**மாலபே**

நபரொருவரை கொலை செய்துவிட்டு தங்க ஆபரணங்களை திருடிய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவரும், திருடப்பட்ட தங்க ஆபரணங்களை அடகு வைத்த நபரொருவரும் நேற்று முன்தினம் (20) மேல் மாகாண தெற்கு குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாலபே பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிசிலபுர, தம்பஹவத்த, தலாஹேன என்ற முகவரியில் கடந்த 16ஆம் திகதி நபரொருவரை கொலை செய்துவிட்டு தங்க ஆபரணங்களை திருடிய சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேகநபர்கள் இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதன்போது திருடப்பட்ட தங்க ஆபாரணங்களை அடக்குவைத்த நபரொருவரும் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

களனி, பொரளை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 25 மற்றும் 47 வயதுடைய மூவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். மேல் மாகாண தெற்கு குற்றத்தடுப்புப் பிரிவினரால் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## தங்க ஆபரணங்களை திருடிய மூவர் கைது

**– பிலியந்தலை**

மோட்டார்சைக்கிளில் வந்து தங்கச் சங்கிலியை திருடிச்சென்ற சம்பவம் குறித்து பிலியந்தலை பொலிஸ் நிலையத்தில் பதிவாகியிருந்த முறைப்பாட்டுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் மூவர் பிலியந்தலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எலபான வீதி, கொரகபிட்டிய பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் பிலியந்தலை பொலிஸ் நிலைய அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மாத்தறை மற்றும் கஹவத்தை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 21 தொடக்கம் 29 வயதுக்கிடைப்பட்ட மூவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மஹரகம மற்றும் கெஸ்பேவ ஆகிய பொலிஸ் பிரிவுகளிலும் இதுபோன்ற கொள்ளைச் சம்பவங்களை மேற்கொண்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை பிலியந்தலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## போதைப்பொருட்களுடன் சந்தேகநபர்கள் கைது

**களுத்துறை**

களுத்துறை குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய, களுத்துறை வடக்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹெலபடவத்த பாலத்துக்கு அருகில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 05 கிராம் 590 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் 500 போதை மாத்திரைகள் என்பவற்றுடன் மோட்டார்சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக களுத்துறை வடக்கு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

பயாகல பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறை வடக்கு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

**கிராண்ட்பாஸ்**

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிரிமுத்து உயன தொடர்மாடி குடியிருப்புக்கு அருகில் கிராணட்பாஸ் பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 06 கிராம் 130 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு 14ஐச் சேர்ந்த 27 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். கிராண்ட்பாஸ் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## துப்பாக்கியுடன் நபரொருவர் கைது

**பல்லகெடுவ**

பல்லகெடுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோவுஸ்ஸ பிரதேசத்தில் நேற்று முன்தினம் பல்லகெடுவ பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் அந்த துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் ஒரு தோட்டா என்பவற்றுடன் நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கோவுஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், பல்லகெடுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# 133 பேருடன் சென்ற சீன விமானம் விபத்து



சீனாவில் 133 பேருடன் சென்ற விமானமொன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

சீனாவின் குன்மிங் நகரத்திலிருந்து குவாங்சூ மாகாணம் நோக்கி 133 பயணிகளுடன் சென்ற ஈஸ்டர்ன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான போயிங் 737 ரக விமானம் டென்சியாங் என்ற பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.





விமானம் நேற்று பிற்பகல் 2.22 மணியளவில் விமான நிலையத்துடனான தொடர்பை இழந்துள்ளது. அப்போது, விமானம் 3225 அடி உயரத்தில் பறந்துகொண்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டது. இந்த விமானம் 3.05 மணிக்கு தரையிறங்கியிருக்கவேண்டும். ஆனால், அது விமான நிலையத்துடனான தொடர்பை இழந்ததால், அவசர செய்தி அனுப்பப்பட்டு, தேடுதல் பணி நடைபெற்றதைத் தொடர்ந்து விமானம் விபத்துக்குள்ளான தகவல் வெளியாகியுள்ளது.

விபத்துக்குள்ளாகி, சீன விமானம் மலைப் பகுதியில் வீழ்ந்து நொறுங்கியதால் அப்பகுதியில் காட்டுத்தீ ஏற்பட்டிருப்பதாகவும், இதனால் மீட்புப் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தென்சீனாவிலுள்ள மலைப் பகுதியில் விமானம் வீழ்ந்து தீப்பற்றி எரியும் காட்சி வெளியாகியுள்ளது. விபத்தில் பயணிகள் உயிரிழப்பு குறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்புகள் வெளியாகவில்லை.

ஈஸ்டர்ன் எயார்லைன் நிறுவனத்தில் போயிங் 737, 737 MAX என இரண்டு பிரிவுகளாக விமானங்கள் உள்ளன. இதில் 737 MAX வகை விமானங்கள் கடந்த சில ஆண்டுகளில் தொடர்ந்து விபத்துகளில் சிக்கி வருகிறது. ஆனால், அதற்கு முந்தைய கண்டுபிடிப்பான போயிங் 737 விமானத்தில் பெரியளவில் கோளாறுகள் கண்டுபிடிக்கவில்லை. இந்நிலையில், குன்மிங் பகுதியிலிருந்து குவாங் ஸோ நோக்கிச் சென்ற பயணிகள் விமானம் விபத்துக்குள்ளாகியுள்ளது.

# பேச்சு நடக்காவிட்டால் 3ஆம் உலகப் போர் மூளும்

## உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி தெரிவிப்பு

உலக செய்திகள்



- புட்டின் புதிய உத்தரவு; உக்ரைன் போர் அணு ஆயுதப் போராக மாறும் அச்சம்
- அடுத்த 24 மணிநேரம் மிகுந்த எச்சரிக்கை



உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் இன்று 27ஆவது நாளாகவும் தொடரும் நிலையில், போரை நிறுத்த ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். இதுகுறித்து தொலைக்காட்சி சேவையொன்றுக்கு ஸெலென்ஸ்கி வழங்கியுள்ள செவ்வியில்,

''புட்டினுடன் பேச்சு நடத்த நான் தயாராக உள்ளேன். பேச்சு நடத்தாமல் இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவர முடியாது. இந்தப் போரை நிறுத்த ஒரு சதவீத வாய்ப்பு இருந்தாலும் அதை பயன்படுத்த பேச்சு நடத்த நாங்கள் தயார். ஆனால், இந்த முயற்சியும் தோல்வியடைந்தால், அது 3ஆம் உலகப் போருக்கு வித்திடும்'' - என்றார்.

### புட்டின் புதிய உத்தரவு

இந்நிலையில் ரஷ்ய ஜனாதிபதி புட்டின், பேரழிவு நாளுக்கு இராணுவ கொமாண்டர்கள் அணு ஆயுதங்களை விமானத்தில் கொண்டுசெல்லும் பயிற்சியை மேற்கொள்ளுமாறு புதிய உத்தரவை பிறப்பித்துள்ளார். புட்டினின் இந்த புதிய உத்தரவு உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இன்று 27 நாட்களாக நடைபெறும் உக்ரைன் யுத்தத்தில் ரஷ்யாவுக்கு பெரும் உயிர்ச்சேதம் ஏற்பட்டு 17 ஆயிரம் வீரர்களை இழந்துவிட்டது. இந்த அணு ஆயுதப் பயிற்சியின் மூலம் போரின் பேரழிவு நாளை புட்டின் திட்டமிட்டிருப்பார் என்று கூறப்படுகிறது.

ஆயுதம் தாங்கி ஹைப்பர் ஸோனிக் ஆயுதங்களையும் ஏவுகணைகளையும் யுத்தத்தில் புட்டின் பயன்படுத்தி ருமேனியா எல்லையருக்கில் இவானா மாகாணத்தில் பூமிக்கடியில் பதுக்கிவைக்கப்பட்டுள்ள உக்ரைனின் ஏவுகணை கிடங்கைத் தாக்கி அழித்ததாக வந்த தகவலையடுத்து அடுத்த 24 மணிநேரம் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கும்படி புட்டின் தமது படைகளுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

### புட்டினின் தாக்குதல் உக்ரைனுடன் நிற்காது

இதேவேளை, ''உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு உலகிற்கு ஒரு திருப்புமுனை. ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் படைகளுக்கு வெற்றி என்பது, 'ஒரு புதிய அச்சுறுத்தல் யுகத்தை' அறிவிக்கும். வெற்றிபெற்ற புட்டின் உக்ரைனுடன் நிற்க மாட்டார். இது, ஜோர்ஜியாவிலும் பின்னர் மோல்டோவாவிலும் விரிவடையலாம். இது, கிழக்கு ஐரோப்பாவில் போல்டிக் முதல் கருங்கடல் வரை புதிய அச்சுறுத்தல் யுகத்தின் தொடக்கத்தைக் குறிக்கும்'' - என பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

### போலந்துக்குச் செல்லும் பைடன்

ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுபயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எதிர்வரும் 25ஆம் திகதி உக்ரைனின் எல்லை நாடான போலந்துக்கு செல்லவுள்ளார்.

இதன்போது போலாந்து ஜனாதிபதி ஆண்ட்ரிச் டூடாவை ஜோ பைடன் சந்தித்து ஆலோசனை நடத்துகிறார். இருநாட்டு தலைவர்களும் மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் நெருக்கடி குறித்து பேசவிருப்பதாக தெரிகிறது. உக்ரைன் மீது ரஷ்யா நடத்தி வரும் தாக்குதல் மற்றும் போலாந்தில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல் போன்ற விவகாரங்களுக்கு மத்தியில் போலாந்திற்கு பைடன் பயணம் மேற்கொள்வது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

### ''சரணடையும் பேச்சுக்கே இடமில்லை''

''உணவு, குடிநீருக்கு கடும் தட்டுப்பாடு உள்ளதால், ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு சரணடைந்து விடுங்கள். மரியுபோல் நகரையும் ஒப்படைக்க வேண்டும். சரணடைய மறுத்தால் பேரழிவுக்குத் தயாராக இருங்கள்'' என்று ரஷ்ய இராணுவத்தின் உயரதிகாரிகள் நேற்றுமுன்தினம் இரவு மரியுபோலிலுள்ள உக்ரைன் இராணுவ வீரர்களுக்கு அதிகாரப்பூர்வமாக தகவல் அனுப்பினர்.

''சரணடையும் பேச்சுக்கே இடமில்லை. ரஷ்யா தனது தவறுகளை உணர்ந்து திருந்த வேண்டும். மரியுபோலிலுள்ள இராணுவ வீரர்கள், இறுதிவரை போராடுவார்கள்'' என்று உக்ரைனின் துணைப் பிரதமர் ஐரைனா வெரஷ்சுக் தெரிவித்துள்ளார்.

மரியுபோல் நகரை முற்றுகையிட்டுள்ள ரஷ்ய இராணுவம் விடுத்துள்ள மிரட்டலுக்கு அஞ்சாமல் உக்ரைன் இராணுவ வீரர்களும் எதிர்த் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளனர்.

உக்ரைனின் தென்கிழக்குப் பகுதியிலுள்ள மரியுபோல், அந்நாட்டின் பெரிய துறைமுக நகரம். உக்ரைனுக்கு வெளியிலிருந்து ஏதும் உதவிகள் வந்துவிடக்கூடாது என்பதற்காக தலைநகர் கீவ்வுக்கு அடுத்தபடியாக மரியுபோலை குறிவைத்து, கடந்த 20 நாட்களுக்கும் மேலாக ரஷ்யப் படைகள் சரமாரியாக தாக்குதல் நடத்திக்கொண்டிருக்கின்றன.



மரியுபோலிலுள்ள பாடசாலைகள், தியேட்டர், தேவாலயம் மற்றும் மருத்துவமனை என எதையும் விட்டுவைக்காமல் ரொக்கெட் ஏவுகணைகளை வீசி,



ரஷ்யப் படைகள் தொடர்ந்து தாக்கிக் கொண்டிருக்கின்றன. இந்தத் தாக்குதலால் மரியுபோல் நகரம் தரைமட்டமாகி வருகிறது.

மின் விநியோகம் இல்லை. குடிநீர் இல்லை. உணவுப்பொருட்களும் மிகமிக குறைந்த அளவே உள்ளன. ஆனாலும் மரியுபோலிலுள்ள 4 இலட்சம் மக்களும் வருவது வரட்டும் என்று தைரியமாக உள்ளனர். அங்குள்ள உக்ரைன் இராணுவ வீரர்களும், சளைக்காமல் ரஷ்யாவின் தாக்குதல்களுக்கு பதிலடி கொடுக்கின்றனர். உக்ரைனின் இந்தத் தாக்குதலில் ரஷ்ய கடற்படையின் முக்கிய அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இதனால் ரஷ்யப் படைகள் ஆவேசமடைந்து, தாக்குதலை தீவிரப்படுத்தி வருகின்றன. தொடர்ந்து நேற்றுமுன்தினமும் ஹைபர்சோனிக் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது.

### 27 நாட்களாக தொடரும் போர்

நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி படையெடுப்பில் ஈடுபட்டது. இது போரல்ல, இராணுவ நடவடிக்கை என ரஷ்ய ஜனாதிபதி புட்டின் தெரிவித்தார். உக்ரைனின் இராணுவ உட்கட்டமைப்பு மீதே தாக்குதல் நடைபெறுகிறது என ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது. உக்ரைனின் நாசிச நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டு வருகிறோம் என்றும் ரஷ்யா தெரிவித்திருந்தது.

எனினும், தொடர்ந்து 3 வாரங்களுக்கும் மேலாக போர் நீடித்துவரும் நிலையில், 115 குழந்தைகள் 848இற்கும் மேற்பட்ட உக்ரைனிய அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். அதுமட்டுமன்றி 33 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் அண்டைநாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளதுடன், 65 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் உள்நாட்டுக்குள்ளேயே இடம்பெயர்ந்துள்ளனர்.

நாளுக்கு நாள் ரஷ்யா, உக்ரைன் மீதான தாக்குதலை தீவிரப்படுத்திவரும் நிலையில் பல்வேறு நகரங்களை கைப்பற்றியுள்ளதுடன், தலைநகர் கீவ் மற்றும் இரண்டாவது பெரிய நகரமான கார்கீவ் உள்ளிட்ட நகரங்களை கைப்பற்றும் நோக்கில் தீவிர தாக்குதல் மேற்கொண்டு வருகின்றது.

போரை நிறுத்த அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் தொடர்ந்து ரஷ்யாவை வலியுறுத்தி வருகின்றன. ரஷ்யாவுக்கு எதிராக பொருளாதாரத் தடைகளையும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் விதித்துள்ளன. எனினும், போரை கைவிட ரஷ்யா மறுத்துள்ளது. உக்ரைனும், தனியாளாக போரை எதிர்கொண்டு வருகிறது.

உக்ரைன் மீது கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி போர்த் தொடுத்த ரஷ்யா இன்று 27ஆவது நாளாகவும் தாக்குதல் நடத்திவருகிறது. கடந்த 3 வாரங்களாக, துறைமுக நகரமான மரியுபோலை சுற்றி வளைத்து ரஷ்ய இராணுவம் கொடூரமாக தாக்குதல் நடத்தி வருகிறது. அங்கு எந்த இடத்திலும் பொதுமக்கள் பதுங்க முடியாதளவுக்கு நகரம் முழுவதும் குண்டுவீசி நாசம் செய்துள்ளது. இதனால் உக்ரைன் போரின் மிகப்பெரிய அடையாளமாக மரியுபோல் நகரம் மாறியுள்ளது. உணவு, குடிநீர், மின்சாரம் இல்லாமலும் வெளியேற முடியாமலும் மக்கள் அவதிப்பட்டுவரும் நிலையில், அங்கு பொதுமக்கள் பதுங்கியுள்ள கட்டடங்களையும் ரஷ்ய இராணுவம் தகர்த்து வருகிறது.

கடந்த புதன்கிழமை 1000 பேர் பதுங்கியிருந்த திரையரங்கு (தியேட்டர்) ஒன்றின் மீது குண்டுவீசி தாக்குதல் நடத்திய ரஷ்ய இராணுவம், நேற்றுமுன்தினம் அதிகாலை மரியுபோலுள்ள பாடசாலையென்றின் மீது குண்டுவீசியது. அந்த பாடசாலையில் சுமார் 400இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பதுங்கியிருந்துள்ளனர். குண்டுவீச்சில் பாடசாலை கட்டடம் தரைமட்டமாகியுள்ளது. அங்கு பதுங்கியிருந்தவர்கள் நிலை என்னவானது என உடனடியாக எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. ஏற்கனவே குண்டுவீச்சில் தகர்க்கப்பட்ட தியேட்டரின் கட்டட இடிபாடுகளிலிருந்து 130 பேர் மட்டுமே மீட்கப்பட்டுள்ளனர். எனவே, அங்கு நூற்றுக்கணக்கான மக்கள் பலியாகி இருக்கலாம் என அஞ்சப்படும் நிலையில் தற்போது பாடசாலை கட்டடம் மீதும் ரஷ்யா தாக்குதல் நடத்தியுள்ளது.

இதுவரை மரியுபோலில் மட்டும் 2,300 பேர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. அவர்களில் பலர் கட்டட இடிபாடுகளில் புதைந்து பலியாகி இருப்பதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். பாடசாலை கட்டடம் மீதான தாக்குதலைத் தொடர்ந்து வீடியோ வெளியிட்ட உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி,

''அமைதியான நகரத்தில் ஆக்கிரமிப்பாளர்கள் செய்த செயல் ஒரு பயங்கரவாதம். இந்த போர்க்குற்றம் நூற்றாண்டுகளுக்கும் நினைவில் இருக்கும்'' - என்றார்.

### இரசாயன ஆலையில் தாக்குதல்

இந்நிலையில், உக்ரைனின் சுமி நகர ஆளுநர் ஓபிளாஸ்ட் டிமிட்ரோ ஜிவித்ஸ்கி தெரிவிக்கையில்,

ரஷ்யப் படைகள் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் நடத்திய வான்வழித் தாக்குதலில் சுமிகிம்ப்ரோம் பகுதியிலுள்ள இரசாயன ஆலையில் சேதம் ஏற்பட்டுள்ளது. அந்த ஆலையிலிருந்து அமோனியா வாயு கசிவு ஏற்பட்டுள்ளது. இதனால், அந்தப் பகுதியில் 2.5 கிலோமீற்றர் தொலைவுக்கு வாயு கசிவு பரவியுள்ளது - என்றார்.

### 2ஆவது முறையாகவும் ஹைபர்சோனிக் ஏவுகணை தாக்குதல்

இதற்கிடையே, சனிக்கிழமை முதன்முறையாக ஹைபர்சோனிக் ஏவுகணையை வீசி தாக்குதல் நடத்திய ரஷ்யா நேற்றுமுன்தினம் மீண்டும் 2ஆவது முறையாக மற்றொரு ஹைபர்சோனிக் ஏவுகணையை ஏவியதாக தெரிவித்துள்ளது.

கருங்கடலை ஒட்டி அமைந்துள்ள துறைமுக நகரமான மைகோலைவ் நகரை ஒட்டிய கோஸ்டியன்ட்னிவ்கா பகுதியில் ஏவப்பட்ட கின்சால் ஹைபர்சோனிக் ஏவுகணை மூலம் உக்ரைனின் எரிபொருள் கிடங்கு தகர்க்கப்பட்டதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த ஹைபர்சோனிக் ஏவுகணை ஒலியை விட 10 மடங்கு வேகமாக செல்லக்கூடியது. சுமார் 2000 கிலோமீற்றர் தொலைவிலுள்ள இலக்கை தகர்க்கக்கூடியது. இதை மிக் 31 விமானத்திலிருந்து ஏவியதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

மேலும், கஸ்பியன் கடல் பகுதியில் ரஷ்ய போர்க் கப்பல்களிலிருந்து கேலிபிர் ஏவுகணை ஏவி செர்னிஹிவ் பிராந்தியத்தின் நிஸைனிலுள்ள ஆயுதங்கள் பழுதுபார்க்கும் ஆலை தகர்க்கப்பட்டதாகவும் ரஷ்யா தெரிவித்துள்ளது. முன்னதாக சனிக்கிழமை மைகோலைவ் நகரின் கடற்படை இராணுவ முகாம் மீது ரஷ்யா நடத்திய ரொக்கெட் தாக்குதலில் 40 உக்ரைன் கடற்படை வீரர்கள் உயிரிழந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தலைநகர் கீவ், கார்கிவ் போன்ற நகரங்களில் தொடர்ந்து துப்பாக்கிச்சூடு நடத்தியும், வான்வழியாகவும் நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தப்பட்டது. கார்கிவ்வில் நடத்தப்பட்ட தாக்குதலில் 9 வயது சிறுவன் உட்பட 5 பேர் உயிரிழந்துள்ளனர் என உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ளது.

### ரஷ்யாவுக்கு ஆதரவான 11 கட்சிகள் முடக்கம்

உக்ரைனில் ரஷ்யாவுக்கு ஆதரவான 11 எதிர்க்கட்சிகளின் செயற்பாட்டை அந்நாட்டு ஜனாதிபதி ஸெலென்ஸ்கி தற்காலிகமாக முடக்கி உத்தரவிட்டுள்ளார். இதில் 450 உறுப்பினர்களைக்கொண்ட நாடாளுமன்றத்தில் 44 ஆசனங்களை பெற்றுள்ள முக்கிய எதிர்க்கட்சிகளில் ஒன்றான 'ஆப்போசிஷன் பிளெட்போர்ம் போர் லைவ்' கட்சியும் இடம்பெற்றுள்ளது. இக்கட்சியின் தலைவர் விக்டோர் மெட்வெட்சுங்க், ரஷ்ய ஜனாதிபதி புட்டினுக்கு மிக நெருக்கமானவராவார். அதேபோல், முராயேவ் தலைமையிலான நாஸி கட்சியும் தடைப்பட்டியலில் இடம்பெற்றுள்ளது. ஸெலென்ஸ்கிக்கு பதிலாக முராயேவைத்தான் உக்ரைன் ஜனாதிபதியாக்க ரஷ்யா விரும்புவதாக பிரித்தானிய அரசு ஏற்கனவே எச்சரித்திருந்தது. இராணுவ சட்டம் அமுலிலிருக்கும்வரை இந்த 11 கட்சிகளின் செயற்பாடு முடக்கப்படுவதாகவும், முரண்பாடு மற்றும் எதிரிகளுக்கு ஒத்துழைக்கும் நோக்கம் கொண்ட அரசியல்வாதிகளின் முயற்சிகள் வெற்றியடையாது எனவும் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

### தெருக்களில் சிதறியுள்ள ரஷ்ய வீரர்கள் சடலங்கள்

உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி வெளியிட்டுள்ள வீடியோ பதிவில்,

''உக்ரைன் எப்போதும் அமைதியான தீர்வையே நாடுகிறது. நாங்கள் இப்போதும் அமைதியை விரும்புகிறோம். கடுமையான போர்கள் நடந்த இடங்களில், ரஷ்ய வீரர்களின் உடல்கள் வீதிகளில் சிதறிக் கிடக்கின்றன. இந்த உடல்களை யாரும் சேகரிக்கவில்லை. தெற்கிலுள்ள சோர்னோபாய்வ்காவுக்கு அருகில் ரஷ்யப் படைகள் மீது உக்ரைன் படைகள் 6 முறை தாக்கியது'' என்று தெரிவித்துள்ளார்.

### ரஷ்ய இராணுவத்தினர் 14,700 பேர் பலி

இதேவேளை, உக்ரைன் போரில் இதுவரை ரஷ்ய இராணுவத்தைச் சேர்ந்த 14,700 பேர் உயிரிழந்துள்ளனர் - என உக்ரைன் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் 96 விமானங்கள், 21 ஆளில்லா விமானங்கள், 118 ஹெலிகொப்டர்களைச் சுட்டு வீழ்த்தியுள்ளதாகவும், 476 பீரங்கிகளைத் தகர்த்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது. 3 கப்பல்கள், 44 விமான எதிர்ப்பு ஏவுகணை அமைப்பு, ஆயுதந்தாங்கிய வாகனங்கள் ஆகியவற்றைத் தாக்கி அழித்துள்ளதாகவும் உக்ரைன் வெளியுறவு அமைச்சு தமது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளது.



# இலங்கை – இந்தியா மோதிய ஆடுகளத்தில் குறைபாடு!

சுற்றுலா இலங்கை - இந்திய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரின் இரண்டாவதும், இறுதியுமான பகலிரவு டெஸ்ட் போட்டி கடந்த மார்ச் 12ஆம் திகதி ஆரம்பமாகி வெறும் 3 நாட்களில் நிறைவுக்கு வந்தது. இந்த போட்டியில் இந்திய அணி 238 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. 5 நாட்கள் நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்ட போட்டி வெறும் மூன்றே நாளில் முடிவடைந்துவிட்டது.

இந்த போட்டியில் இரு அணிகளும் விளையாடிய பெங்களூர் சின்னசுவாமி மைதானத்தின் ஆடுகளம் சிறந்ததாக இல்லை என சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ.சி.சி) மதிப்பிட்டுள்ளது. குறித்த போட்டியின் மத்தியஸ்தர் ஜவகல் ஸ்ரீநாத் கூறுகையில், முதல் நாளிலேயே ஆடுகளம் நிறைய திருப்பங்களை அளித்தது. என் பார்வையில், இது துடுப்பு மட்டை மற்றும் பந்திற்கு இடையேயான போட்டி அல்ல என்று கூறியுள்ளார். இதனால் இலங்கை - இந்தியா அணிகள் விளையாடிய குறித்த பெங்களூர் மைதானத்தின் ஆடுகளத்தை, சராசரிக்கும் குறைவாக ஐ.சி.சி. மதிப்பிட்டுள்ளது.

# இலங்கை கிரிக்கெட் அணிக்கு பயிற்சியாளராகும் சில்வர்வூட்

இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக செயற்பட்டுவந்த மிக்கி ஆர்த்தர் குறித்த பதவியில் இருந்து விலகிய நிலையில் இலங்கை கிரிக்கெட் சபையானது புதிய பயிற்றுவிப்பாளரை தேடி வலைவீசி வருகிறது.

இந்நிலையில் தலைமைப் பயிற்சியாளராகப் பொறுப்பேற்க கிறிஸ் சில்வர்வூட் உடனான இறுதிக் கட்ட பேச்சுவார்த்தையில் இலங்கை கிரிக்கெட் சபை ஈடுபட்டுள்ளது. ஆஷஸ் டெஸ்ட் தொடரின் படுதோல்வியின் பிறகு அண்மையில் கிறிஸ் சில்வர்வூட் இங்கிலாந்து அணியின் தலைமை பயிற்சியாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

இந்தப் பின்னணியிலேயே இலங்கை கிரிக்கெட் சபை கிறிஸ் சில்வர்வூட் உடனான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது. இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளராக செயற்பட்ட மிக்கி ஆர்த்தர் கடந்த டிசம்பரில் தன்னுடைய பதவியிலிருந்து விலகிக்கொண்ட நிலையில் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு இலங்கை கிரிக்கெட் சபை இன்னும் ஒருவரை நிரந்தரமாக நியமிக்கவில்லை.

பல பயிற்றுவிப்பாளர்கள் உடனான பேச்சு வார்த்தைகளுக்கு மத்தியில் இறுதியாக சில்வர்வூட்டுடனான பேச்சுவார்த்தைகளை இலங்கை கிரிக்கெட் தரப்பு ஆரம்பித்துள்ளது. முன்னதாக, நவீட் நவாஸ் இலங்கையின் அடுத்த தலைமை பயிற்சியாளராக வரலாம் என்றும் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# லெஜண்ட்ஸ் அணியினரை வீழ்த்தி சம்பியனானது அக்கரைப்பற்று ஹிஜ்ரா அணி





(மாளிகைக்காடு, கல்முனை நிருபர்கள்)

கிழக்கின் கேடயம் அனுசரணையில் நடைபெற்றுவந்த அக்கரைப்பற்று சம்பியன்ஸ் லீக் கடின பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் அக்கரைப்பற்று பொதுவிளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

அக்கரைப்பற்றை சேர்ந்த 6 விளையாட்டுக் கழகங்கள் பங்கேற்ற இந்த சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியானது அக்கரைப்பற்று லெஜண்ட்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் அக்கரைப்பற்று ஹிஜ்ரா விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் இடம்பெற்றது.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற அக்கரைப்பற்று லெஜண்ட்ஸ் வி.க. முதலில் துடுப்பெடுத்தாடி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்களை இழந்து 118 ஓட்டங்களை பெற்றது. இதில் அதிரடியாக துடுப்பெடுத்தாடிய முஹம்மத் றிஸாம் 59 ஓட்டங்களை பெற்றார். 119 ஓட்டங்களை இலக்காக கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அக்கரைப்பற்று லெஜண்ட்ஸ் வி.க, ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களின் அதிரடியாட்டம் காரணமாக 16.2 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்களை இழந்து 2 விக்கெட்கள் வித்தியாசத்தில் சம்பியனானது.

தொடராட்டக்காரர் விருதை 78 ஓட்டங்களையும், 14 விக்கெட்களையும் வீழ்த்திய றோயல் அணி வீரர் அஸார் தனதாக்கிக் கொண்டார். இறுதியாட்ட நாயகனாக 56 ஓட்டங்களை பெற்ற அக்கரைப்பற்று ஹிஜ்ரா அணி வீரர் றிசாட் தெரிவானார்.

பரிசளிப்பு நிகழ்விற்கு கிழக்கின் கேடயம் அமைப்பின் தலைவரும் அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினருமான அக்கரைப்பற்று அனைத்துப்பள்ளிவாசல் சம்மேளனத் தலைவர் எஸ்.எம். சபீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வெற்றிக்கேடயங்களை வழங்கி வைத்தார். மேலும் இந்நிகழ்வில் ஐ.டீ. கியூ.லேப் தவிசாளர் ஸபூர் ஆதம், இறக்காமம் பிரதேச செயலக சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகிர், கிழக்கின் கேடயம் பொதுச்செயலாளர் யூ.எல்.என். ஹூதா, சிரேஷ்ட ஊடகவியலாளர் அதிபர் றியாஸ் இஸ்மாயில் உட்பட பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



ஆசிய ஹொக்கி சம்மேளனத்தின் ஏற்பாட்டில் ஜகர்த்தாவில் நடைபெற்ற ஆசிய ஹொக்கி சம்மேளன கிண்ணத் தொடரில் இலங்கை அணி வெண்கலப் பதக்கத்தை வென்றது. எனினும் இலங்கை அணி ஆசியக்கிண்ணத் தொடரில் விளையாடும் வாய்ப்பை இழந்தது.

# அஸார்தீன் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் சம்பியனான வயம்ப வீல்ஸ்

(இக்பால் அலி)

அஸார்தீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் டி.எஸ்.சி விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் அஸார்தீன் கிரிக்கெட் சுற்றுப் போட்டி அண்மையில் குருநாகல் மல்லவப்பிட்டிய சாமோதய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

எட்டு விளையாட்டுக் கழகங்கள் கலந்து கொண்ட இந்த சுற்றுப் போட்டியில் இறுதியாக தெரிவு செய்யப்பட்ட ஓல்ட் ஸ்டார் விளையாட்டு கழகத்திற்கும் வயம்ப வீல்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே இடம்பெற்ற போட்டியில் 13 ஓட்டங்களால் வயம்ப வீல்ஸ் வெற்றி இலக்கை தனதாக்கிக் கொண்டது.

தொடரின் சிறந்த விளையாட்டு வீரராக ஓல்ட் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் பஸ்மில் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த பந்துவீச்சாளராக வயம்ப வீல்ஸ் விளையாட்டுக் கழக வீரர் பர்ஹான் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த துடுப்பட்ட வீரராக ஓல்ட் ஸ்டார் விளையாட்டுக் கழக வீரர் சப்ரி தெரிவு செய்யப்பட்டார்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக குருநாகல் மாநகர சபை உறுப்பினர் அஸார்தீன் மொகைய்னுதீன் கலந்து சிறப்பித்தார். அத்தோடு குருநாகல் ஹிஸ்புல்லாஹ் மத்திய கல்லூரியின் அதிபர் ஏ.எச்.எம்.முனாப், பௌத்த சமயத் தலைவர்கள், குருநாகல் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் செயலாளர் மௌலவி ஏ.ஜீ.எம். பௌமி கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





# இரண்டாவது டெஸ்ட்டும் சமநிலையில் நிறைவு



சுற்றுலா இங்கிலாந்து – மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி சமநிலையில் நிறைவுக்கு வந்த நிலையில் இரண்டாவது போட்டியும் சமநிலையில் நிறைவுக்கு வந்தது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு, அணித்தலைவர் ஜோ ரூட் 153 ரன்கள் குவித்தார். அவருடன் ஜோடி சேர்ந்த டான் லாரன்ஸ் (91 ரன்கள்) மற்றும் பென் ஸ்டோக்ஸ்சின் (அதிரடி சதம்) ஆகியோரின் பங்களிப்பில் 9 விக்கெட் இழப்பிற்கு 507 ரன்கள் குவித்த நிலையில் இன்னிங்ஸை இடைநிறுத்தியது.

பதிலுக்கு முதல் இன்னிங்ஸில் களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி, ஆரம்ப துடுப்பாட்ட வீரரும், அணித்தலைவருமான பிராத்வெயிட் மற்றும் ஜெர்மைன் பிளாக்வுட் ஆகியோரின் சதத்தால், மொத்தமாக 411 ரன்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. இதையடுத்து தனது இரண்டாம் இன்னிங்ஸில் விளையாடிய இங்கிலாந்து அணி ஆட்டத்தின் கடைசி நாளான நேற்று 6 விக்கெட் இழப்பிற்கு 185 ரன்கள் எடுத்த நிலையில் இன்னிங்ஸை இடைநிறுத்தியது.

282 ரன்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி தொடக்கத்தில் ஒருசில விக்கெட்களை இழந்து திணறியது. எனினும், அணித்தலைவர் பிராத்வெயிட் பொறுப்புடன் நிதானமாக விளையாடி அணியை சரிவிலிருந்து மீட்டார். 65 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 135 ரன்கள் எடுத்திருந்தபோது,

கடைசி நாள் ஆட்டம் முடிவுக்கு வந்ததால்,போட்டி சமநிலையடைந்தது.

இரு இன்னிங்ஸ்களிலும் சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திய கிரேக் பிராத்வெயிட் ஆட்டநாயகனாக தேர்ந்தெடுக்கப்பட்டார். டெஸ்ட் தொடர் 0-0 என சமநிலையில் காணப்படும் நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவதும் இறுதியுமான போட்டி நாளை மறுதினம் க்ரெணடாவில் ஆரம்பமாகிறது.




# 2011 IPLக்கும், 2022 IPLக்கும் இடையிலான ஒற்றுமைகள்




**2022** ஐ.பி.எல். தொடரில் புதிதாக 2 அணிகளுடன் சேர்ந்து 10 அணிகள் போட்டியிடுகின்றன. ஏற்கனவே இதேபோன்று 10 அணிகள் மோதியபோது என்ன நடந்தது என்பதை ரசிகர்கள் ஒப்பீடு செய்து வருகின்றனர். அப்போது சென்னை சம்பியனாகியதால் இம்முறையும் சென்னை சம்பியனாகுமா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

2011ஆம் ஆண்டு தொடருக்கும்,

இப்போது நடைபெறவுள்ள தொடருக்கும் பல ஒற்றுமைகள் இருப்பது தெரியவந்துள்ளது.

2022ஆம் ஆண்டில் 10 அணிகள் பங்கேற்பதுபோல், 2011ஆம் ஆண்டும் 10 அணிகள் மோதின. 2011ஆம் ஆண்டு உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் நடைபெற்றது. அதேபோன்று இந்த ஆண்டும் ரி20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் நடைபெறவுள்ளது.

2011ஆம் ஆண்டு நடப்பு சம்பியனாக சி.எஸ்.கே. களமிறங்கியது. இதேபோன்று 2022ஆம் ஆண்டு நடப்பு சம்பியனாக சி.எஸ்.கே. களமிறங்குகிறது. 2011ஆம் ஆண்டு 10 அணிகள் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டன. இதே போன்று 2022 ஐ.பி.எல். தொடரும் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

2011ஆம் ஆண்டு முதல் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும், கொல்கத்தா அணியும் பலப்பரீட்சை நடத்தின. அதே போன்று தான் இந்த முறையும். இதனால் 2011ஆம் ஆண்டு சி.எஸ்.கே. சம்பியன் பட்டத்தை வென்றதுபோல், 2022ஆம் ஆண்டும் சி.எஸ்.கே. சம்பியன் பட்டத்தை வெல்லுமா என்ற எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

ஆனால் இந்த பயணம் அவ்வளவு எளிதாக இருக்காது. ஏனெனில் மெகா ஏலத்தில் பல்வேறு அணிகள், தங்களது வீரர்களை மற்ற அணியிடம் பறிகொடுத்துவிட்டன. இதனால் எந்த அணி விரைவில் அணியை கட்டமைத்து, சிறப்பாக விளையாடுகிறதோ அந்த அணியே சம்பியன் பட்டம் வெல்லும்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7